

# வருடாந்த அறிக்கை 2017

இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை

# 2 0 1 7

# வருடாந்த அறிக்கை

இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை

# உள்ளடக்கம்


1. துரநோக்கு, பணிக்கூற்று மற்றும் வழிகாட்டல் மூலஅம்சங்கள் 3
2. கௌரவ அமைச்சரின் வாழ்த்துச் செய்தி 6
3. இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை தலைவரின் வாழ்த்துச் செய்தி 8
4. இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையின் முகாமைத்துவ சபை 9
5. இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையின் பணிப்பாளர்கள் மற்றும் சபையின் பிரிவுகளுக்கான பொறுப்பாளர்கள் 10
6. உலகளாவிய சுற்றுலாத்துறை தொடர்பான முழுமையான விளக்கங்கள் 11
7. இலங்கை சுற்றுலா மீளாய்வு 12
8. 2017 ஆம் ஆண்டின் சாதனைகள் 14
   - 8.1 சுற்றுலாத்துறையின் பெறுமதியை கூட்டுதல் 14
   - 8.2 கூட்டிட முகாமைத்துவம் மற்றும் அபிவிருத்தி 17
   - 8.3 தரம் மற்றும் தர உறுதிப்பாடுகள் 20
   - 8.4 சர்வதேச அனுபவங்களை பெற்றுக் கொள்ளல் மற்றும் ஊழியர்களுக்கு அறிவு மேம்படுத்தும் அபிவிருத்தி 24
   - 8.5 உள்நாட்டு சுற்றுலா மற்றும் சமூக இணைப்புக்கள் (DT & CR) 26
   - 8.6 எமது நிறுவனத்தின் ஊழியர்கள் 29
   - 8.7 செயற்பாடுகள் தொடர்பான ஏனைய தகவல்கள் 30
9. நிதிபற்றிய விசேட குறிப்புக்கள் 32
   - 9.1 முன்னேற்றங்கள் தொடர்பான விசேட அம்சங்கள் 33
10. நிதிக் கூற்றுக்கள் 37
    - 10.1 நிதி நிலைமை தொடர்பான கூற்று 39
    - 10.2 திரண்ட வருமானம் தொடர்பான கூற்று 40
    - 10.3 பங்கு மற்றும் மாற்றங்கள் தொடர்பான கூற்று 41
    - 10.4 நிதிப் பாய்ச்சல் கூற்று 41
    - 10.5 நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள் 42
11. கணக்காய்வாளர் அறிக்கை 63


## துரநோக்கு

மறக்கமுடியாத உண்மையான பல்லினத்துவம் வாய்ந்த சுற்றுலா அனுபவங்களுக்கான உலகத்தில் மிகச்சிறந்த தீவாக மதிக்கப்படுதல்.

## பணிக்கூற்று

சகல சமுகங்கலையும் உள்ளடக்கிய மற்றும் எமது சற்றுச் சூழலுக்கு பொறுப்பு கூறும் வகையில் மேலும் எமது நாட்டுக்கும் மக்களுக்கும் பொருளாதாரரீதியாக நன்மை பயக்ககூடியதாகவும் இலங்கையின் இயற்கை மற்றும் கலாசார மரபுரிமைகளை பிரதிபலிக்கும் தனித்துமிக்க அனுபவங்களை வளங்கும் மிக உயர் பெறுமத்மிக்க சுற்றுலா தலமாக இலங்கை விளங்க வேணிடும்.



# வழிகாட்டல் கோட்பாடுகள்

## 1 சுற்றுலாத்துறையின் பிரதிலாபங்களை இலங்கைக்குப் பெற்றுக் கொள்ளல்:

சுற்றுலாத்துறையின் அதிஉயரிய பங்களிப்பு காரணமாக இலங்கையின் பொருளாதாரத்தை அபிவிருத்திசெய்யவும் மற்றும் விரிவுபடுத்தல். இதற்கமைய சுற்றுலாத்துறை இலங்கை பொருளாதாரத்திற்கு ஒரு முக்கிய தூனாக அமைவதனால் அரசாங்கத்தின் தீர்மானம் எடுக்கும் செயற்பாடுகளின் போது முன்னுரிமை வழங்கக்கூடிய துறையாக விளங்கவேண்டும். சுற்றுலாத்துறையின் அபிவிருத்தியில் தனியார்துறையின் பங்கு அரச உதவியுடன் ஒரு மிக முக்கிய பங்கை வகிக்கவேணிடும்.

## 2 பொருளாதார அபிவிருத்திக்காக சகல நபர்களினதும் பங்குபற்றலை தாராளமயப்படுத்தல்:

தேறிய அந்நிய நாட்டு செலாவணி வருமானத்தின் உயர்ந்தபட்சம் பெற்றுக் கொள்ளல், அபிவிருத்தியை நாடு பூராகவும் விரிவுபடுத்தல், இலங்கையர்களுக்காக பயன்மிக்க தொழில் வாய்ப்புக்களை உருவாக்குவதன் மூலம் இலங்கையின் பொருளாதாரத்திற்கு அதிஉயரிய பெறுபேறுகளை வழங்கும் செயற்பாடுகள் சுற்றுலாத்துறை மூலம் மேற்கொள்ளப்பட வேண்டும். சுற்றுலாத்துறையின் முன்னேற்றங்களைப் போன்று சகல தரப்பினர்களுக்கும் நியாயமான முறையில் பகிரக்கூடிய சமூகப் பொருளாதார பிரதிலாபங்கள் கிடைக்கக்கூடிய வகையில் பெறுமதி செயற்பாட்டினை மேம்படுத்தல் மற்றும் மிகவும் வலுவடையச் செய்தல், பிரயோக ரீதியில் நீண்ட கால பொருளாதார செயற்பாட்டுப் பணிகளை உறுதிப்படுத்துவதற்கும் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்.

## 3 எமது சொத்துக்களை பாதுகாப்பதுடன் அவற்றை உலக தரத்திற்குஏற்ப முகாமைத்துவம்:

இலங்கையின் இயற்கை சூழலுக்குப் பாதக விளைவுகள் ஏற்படுவதை தவிர்த்து அதனைப் பாதுகாத்தல் மற்றும் அபிவிருத்தி செய்வதைப் போன்று வரலாற்று முக்கியத்துவம் மிக்க, சமூக மற்றும் கலாசார உரிமைகளைப் பாதுகாத்தல் உட்பட விருத்தி செய்தல், அத்தியாவசிய சுற்றாடல் செயற்பாடுகளை முன்னெடுத்து இயற்கை உயிரியல் பல்வகைத் தன்மையினை பாதுகாப்பதற்கு உதவக்கூடிய வகையிலும் சுற்றாடல் சார்ந்த வளம் உயரிய மட்டத்தில் பயன்படுத்தப்பட வேண்டும்.

## 4 எமது சமூகத்தின் ஈடுபாடு:

சுற்றுலாப் பயணிகள் பிறஇன மக்களை சந்திப்பதால் அவர்களின் நடவடிக்கைகள் பிரயாணம் செய்யும் இடத்தில் உள்ள மக்களின் சமுக கலாச்சார பண்பாடுகலை மதிப்பளித்து அவற்றை மேலும் பேணிப் பாதுகாப்தற்கு உதவியாகவும் எவ்வகையிலும் பிரதேச மக்களின் சகிப்புதன்மை எல்லையை மீறக்கூடாது. சுற்றுலா அபிவிருத்தியானது அப்பிரதேச மக்களின் உண்மையாகவே முழுமையான பங்கு கொள்ளக்கூடிய வகையில் மேற்கொள்ளவேண்டும். வலுவான மத்திய அரசியல் தலைமத்துவத்தின் கீழ் மாகாண மற்றும் உள்ளூர் அரசாங்களை உள்ளடக்கிய சகல இன மக்களும் அறியத்தக்கவகையிலும் சுற்றுலா தொடர்புடைய சகல பங்குதாரர்களின் ஒருமித்த ஆதரவுடன் கட்டியெழுப்பவேண்டும்.

## 5 எமது பாரம்பரியத்தை உள்ளடக்கிய மறக்கமுடியாத அனுபவங்கள்:

இலங்கையின் சுற்றுச் சூழல், மதம் சமுகம் மற்றும் கலாச்சார பாரம்பரியங்களை உள்ளடக்கிய பிரயாணங்களை மையப்படுத்தியதாக சகல சேவைகள் மற்றும் நடவடிக்கைகள் அமைந்திருக்க வேண்டும். சுற்றுலாத்துறையின் சேவை மற்றும் செயற்பாடுகள் மூலம் சுற்றுலாப் பிரயாணிகளுக்கு உயரிய மட்டத்திலான திருப்தி வழங்கப்பட வேண்டியதுடன், சுற்றுலாப் பிரயாணிகளுக்கு கற்பதற்கான வாய்ப்பு மற்றும் அதிசிறந்த சுற்றுலா ஒப்பளவுகள் தொடர்பிலான அறிவுறுத்தல்களை விருத்தி செய்து சுற்றுலா பிரயாணிகளுக்கு பயன்மிக்க அனுபவத்தை கிடைப்பதாக உறுதிப்படுத்த வேண்டும்.

## 6 பொறுப்பு வாய்ந்த முறையில் எமது பிரதேசத்தை சந்தைபடுத்தல்:

எமக்கே உரித்தான சூழல், பாரம்பரிய மரபுகள் மற்றும் சுற்றுலா பயணிகளை கவரக்கூடிய விடையங்களை முன்னிலைப்படுத்தி இலங்கையை சந்தைப்படுத்தும் போது மிகவும் பொறுப்பு வாய்ந்த முறையில் நடந்து கொள்ளவேண்டும்.

## 7 சகலருக்கும் பாதுகாப்பை உறுதிப்படுத்தல் :

சகல சுற்றுலாப் பிரயாணிகள், முதலீட்டாளர்கள் மற்றும் சமூகத்தினருக்கும் மேலும் விலங்குகளுக்கு பாதுகாப்பும் அவர்களுக்கு ஒரு சாதகமான சூல்நிலையை உறுதிப்படுத்தப்படுத்த வேண்டும்.







## சுற்றுலாக் கைத்தொழில் மற்றும் கிருஸ்துவ விவகார அமைச்சர் கௌரவ ஜோன் அமரதுங்க அவர்களின் வாழ்த்துச் செய்தி

இலங்கை தற்போது சுற்றுலாக் கைத்தொழிலின் துரித முன்னேற்றங்களை எட்டி வருகின்றது. இம்மாற்றங்கள் மூலம் உலகளாவிய சுற்றுலா சந்தையில் இலங்கையின் போட்டிகரமான நிலைமையினை மேம்படுத்த நாம் உயரிய மட்டத்தில் எதிர்பார்க்கக்கூடியவாறு சுற்றுலாக் கைத்தொழில் மூல உபாயத் திட்டம் (TSP) வகுப்பதற்காக முன்னெடுக்கப்பட்ட முயற்சிகள் காரணமாக இம்மாற்றச் செயற்பாடுகளை எட்ட முடிந்துள்ளது.

அமுல்படுத்த தயார்படுத்தப்பட்டுள்ள இத் திட்டங்கள் மூலம் எமது சுற்றுலா சொத்துக்களின் ஊடாக கிடைக்கும் பிரதிலாபத்தை விருத்தி செய்தல் மற்றும் உயர்ந்தபட்சமாக மாற்றியமைப்பதற்கான வியூகங்கள் விருத்தி செய்யப்பட்டுள்ளன. சுற்றுலாக் கைத்தொழிலில் அனைத்து தரப்பினர்களினதும் செயற்பாட்டு பங்களிப்பு மூலம் அமுல்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ள இவ் மூலஉபாயத் திட்டங்களின் மூலம் எதிர்வரும் 03 ஆண்டுகளுக்குள் முன்னெடுக்க வேண்டிய செயற்பாடுகள் உட்பட அவற்றை அமுல்படுத்தும் பொறிமுறை பரிந்துரை செய்யப்பட்டுள்ளதுடன் அக்கால எல்லை இறுதியில் 4 மில்லியன் சுற்றுலாப் பிரயாணிகளை எமது தேசம் மீது கவர்ச்சிக்குட்படுத்துவதற்கும், 600,000 பேர்களுக்காக நேரடி வேலைவாய்ப்புக்களை உருவாக்குவதைப் போன்று 5 பில்லியன் அ.டொலருக்கு மேற்பட்ட வருமானத்தை பெற்றுக் கொள்ளவும் நாம் எதிர்பார்த்துள்ளோம்.

இலங்கையில் தென்மேற்கு கரையோரப் பிரதேசத்தின் ஒரு சில இடங்களில் காணப்படும் சுற்றுலா கைத்தொழிலைத் தவிர ஏனைய இடங்களில் சுற்றுலா கைத்தொழிலுக்காக காணப்படும் உயரிய இயலுமை இதுவரையில் வெளிப்படுத்தப் படவில்லை. விசேடமாக அதிகரித்த முதலீடு, தொழில் வாய்ப்பு உருவாக்கம், சுற்றாடல் நிலையான தன்மை மற்றும் உள்நாட்டு பொருளாதாரத்திற்காக பங்களிப்பு போன்ற துறைகள் ஊடாக சுற்றுலாக் கைத்தொழில் அபிவிருத்திக்காக பாரிய இயலுமைகள் இலங்கையில் காணப்படுகின்றது.

சுற்றுலாக் கைத்தொழிலை பொருளாதார ரீதியில் பலம் பொருந்திய பிரிவாக அபிவிருத்தி செய்வது தமது ஒரேயொரு நோக்கத்துடன் சுற்றுலா கைத்தொழிலின் நீடித்த நிலையான தன்மையினை விருத்தி செய்வதற்காக கூடுதலாக கவனத்தை ஈர்க்க செய்ய அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது. வெளிநாட்டிற்கு அனுப்புவதன் மூலம் நாட்டிற்கு கிடைக்கும் அன்னிய நாட்டுச் செலாவணி அளவினை மேம்படுத்தி உள்நாட்டுக் கைத்தொழிலை எதிர்காலங்களிலும் நாட்டின் மிகப் பெரிய தேசமான செலாவணியினை உழைப்பவராக நியமிப்பது உண்மை என்ற வகையில் அது எமது இலக்காகும். இவ் இலக்கினை எட்டுதற்காக இம்மாற்றக் கட்டத்தின் பிரதான பணியினை தொடர்ச்சியாக மேற்கொள்வதற்காக சுற்றுலா கைத்தொழிலில் ஈடுபடும் தனியார் துறையினை போன்று அரச துறையிலும் சிறந்த முறையில் ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டன.

சுற்றுலாக் கைத்தொழிலின் முறைசாரா பிரிவுகளை வரையறைகள் இன்றி விருத்தி செய்வது நாம் எதிர்கொண்டுள்ள மிகப் பெரிய சவாலாக மாற்றம் பெற்றுள்ளது. எதிர்காலத்தில் அனைத்து சேவை வழங்குனர்களும் இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையில் பதிவு செய்வதனை கட்டாயப்படுத்துவதற்குத் தேவையான சட்டக் கோட்பாடுகளை அமுல்படுத்துவதன் மூலம் இந்த சவாலை வெற்றி கொள்வதற்காக நாம் தற்போது உரிய செயற்பாடுகளை முன்னெடுப்போம்.

இச் சேவைகளுக்காக ஒன்லைன் செயற்பாட்டுத் தொகுதியினை அறிமுகப்படுத்துவதன் மூலம் பதிவு மற்றும் அனுமதிப் பத்திரச் செயற்பாடுகளை வினைத்திறன் மற்றும் பயன்பாட்டினை மேம்படுத்துவதற்கு இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையின் பணிகள் என்பதுடன் புதிய சுற்றுலா தங்குமிடங்களில் விசேடமாக வடக்கு மற்றும் கிழக்கு சுற்றுலா உட்கட்டமைப்பு வசதிகளை விருத்தி செய்வதற்கு முயற்சிகள் எடுக்கப்படுகின்றன. இவ் அறிக்கையில் கீழ்க் குறிப்பிட்ட பக்கங்களில் தற்போது அமுல்படுத்தப்பட்டுள்ள செயற்பாடுகள் மற்றும் இவ் அபிவிருத்திச் செயற்பாடுகளுக்காக செலவிடப்பட்ட செலவினங்கள் தொடர்பில் விபரிக்கப்பட்டுள்ளது. தற்போதைய தேவைகளை நிவர்த்தி செய்வதற்காக இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை மூலம் முன்னெடுக்கப்படும் விடுமுறை விடுதிகளின் தரத்தை மேம்படுத்தி சமகாலப்படுத்த முடியவுள்ளதாக குறிப்பிடுவதற்கு கிடைத்தமை தொடர்பில் விசேடமாக மகிழ்ச்சி அடைகிறேன்.

மலரும் புத்தாண்டில் நீண்டகால சமூக பொருளாதார பிரதிலாபங்களை சமமாக அனுபவித்து பகிர்வதை உறுதிப்படுத்துவதற்காக உதவிக்கூடிய சுற்றுலாக் கைத்தொழில் பெறுமதி வலையமைப்பினை பலப்படுத்துவதன் மூலம் கீழ் மட்டத்தில் அபிவிருத்தியினை ஊக்குவிப்பதற்கு எமக்கு உறுதியாக கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

சுற்றுலா பிரயாணிகளின் வருகையைப் போன்று வருமானம் மற்றும் இரு பிரிவுகள் மூலம் இலங்கை சுற்றுலா கைத்தொழிலின் மற்றுமொரு சாதனை மிகுந்த ஆண்டாக 2017 ஆம் ஆண்டை மாற்றிமைப்பதற்காக பாரிய முயற்சிகள் மேற்கொண்ட இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையின் தலைவர், பணிப்பாளர் நாயகம் மற்றும் பணிப்பாளர் சபையைப் போன்று ஏனைய அனைத்து உத்தியோகத்தர்களுக்கும் நன்றி தெரிவிப்பது என பொறுப்பு எனக் கருதுகிறேன்.





## இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையின் தலைவர் கிசு கோமஸ் அவர்களின் வாழ்த்துச் செய்தி

2019 ஆம் ஆண்டு பெப்ரவரி 06 ஆம் திகதி இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையின் தலைவராக கடமையேற்றதைத் தொடர்ந்து பெற்றுக்கொள்ள முடியுமான புள்ளிவிபரத் தகவல்கள் உட்பட பகுப்பாய்வுகளை அடிப்படையாகக் கொண்டு 2017 ஆம் ஆண்டில் செயற்சாதனையினை தழுவி தலைவரின் மீளாய்வினை சமர்ப்பிக்க வாய்ப்புக் கிடைத்தமை தொடர்பில் மகிழ்ச்சியடைகிறேன். ஏற்கனவே அமுல்படுத்தப்பட்டுள்ள நான்கு ஆண்டு கால மூல உபாயத் திட்டத்தின் முதலாவது ஆண்டாக மீளாய்விற்குட்படுத்தப்பட்ட ஆண்டுக்குள் அதிசிறந்த செயற்சாதனையினை எட்டுவதற்கு எமக்கு முடிந்துள்ளது.

கைத்தறி, ஆடை மற்றும் தைத்த ஆடைகளுக்கு பின்னர் இலங்கை பொருளாதாரத்தின் மூன்றாவது மிகப் பெரிய ஏற்றுமதியை ஈட்டும் சுற்றுலாக் கைத்தொழிலாக மாற்றம் பெற்றுள்ளது. இவ் விடயத்தை கருத்திற் கொண்டு 2017 ஆம் ஆண்டில் சுற்றுலா வர்த்தகத்தின் மூலம் 3.9 பில்லியன் அ.டொலர் மொத்த வருமானத்திலிருந்து ஈட்டுவதற்கு முடிந்துள்ளது. இதன்மூலம் நாட்டின் உள்நாட்டு உற்பத்திகளுக்காக 4.5% நேரடி பங்களிப்பும் வழங்கப்பட்டுள்ளது. 2016 ஆம் ஆண்டில் சுற்றுலாப் பிரயாணிகளின் வருகைக்கு இணைவாக 3.2மூ வளர்ச்சியை பதிவு செய்து 2017 ஆம் ஆண்டில் இலங்கைக்கு 2.116.407 சுற்றுலாப் பிரயாணிகள் வருகை தந்துள்ளனர். நாளொன்றுக்கு சுற்றுலாப் பிரயாணிகளிடமிருந்து கிடைக்கும் அன்னிய நாட்டுச் செலவானி அளவு 170.1 அ.டொலர் ஆகும். மேலும் 2017 ஆம் ஆண்டில் சுற்றுலா கைத்தொழிலின் மொத்த தொழில் உருவாக்கம் 359,215 என அறிக்கைப்படுத்துவதற்கு கிடைத்தமை தொடர்பில் மகிழ்ச்சி அடைகிறேன்.

சுற்றுலாக் கைத்தொழில் ஆண்டில் எந்தவொரு கால எல்லையிலும் தேசத்தில் காணப்படும் இயற்கை அனர்த்தம், உள்நாட்டு மோதல்கள் மற்றும் தனிப்பட்ட பதட்ட நிலைமைகளினால் பாதிப்புக்களுக்குட்பட்ட கைத்தொழிலாக இது காணப்படுகின்றது. 2017 ஆம் ஆண்டில் சுற்றுலாக் கைத்தொழில் அபிவிருத்தி தொடர்பிலான சவால்களுக்கு முகம் கொடுக்க வேண்டி ஏற்பட்ட போதிலும் எதிர்வரும் ஆண்டுக்குள் சுற்றுலாக் கைத்தொழிலில் பாரிய முன்னேற்றங்களை பதிவு செய்வதைப் போன்று சுற்றுலா கைத்தொழிலில் முதலீடுகளை மேற்கொள்ளவும் இயலுமைகள் காணப்படுகின்றன. 2017 ஆம் ஆண்டில் இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபைக்கு அதன் செயற்சாதனையினை பலம்மிக்கதான முறையில் நிறைவேற்ற முடிந்தபோதிலும் சுற்றுலா கைத்தொழிலின் சுபீட்சத்திற்காக முன்னெடுக்க வேண்டிய புதிய செயற்திட்டங்கள் மற்றும் உற்பத்திகள் காரணமாக முதலீடுகளை மேற்கொள்வதற்கு முன்னுரிமையினை வழங்க நாம் தொடர்ச்சியாக நடவடிக்கை எடுத்தோம்.

2025 ஆம் ஆண்டளவில் சுற்றுலா பிரயாணிகளின் உள்ளங்களில் கவர்ச்சிமிக்கதாக நிலைகொண்டுள்ள பல்வேறுபட்ட சுற்றுலா அனுபவங்களை பெற்றுக்கொள்ள முடியுமான தேசமாக இலங்கையை கருதுவார்கள் என்பது எமது உறுதியான எதிர்பார்ப்பாகும்.



## இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையின் முகாமைத்துவ சபை



**இடமிருந்து வலம்.**

1வது வரிசை: திரு. பி. யூ. ரத்நாயக்க. (உறுப்பினர்), திரு. பீ. அல்கம. (உறுப்பினர்), திரு. கிஷூ கோமஸ். (தலைவர்), திரு. எம். சாந்திக்குமார். (உறுப்பினர்)

2வது வரிசை: திரு. கலிந்த மகலந்த. (உறுப்பினர்), திரு. திலக் வீரசிங்க. (உறுப்பினர்), திரு. ரேவோர் ராஜரட்ணம். (உறுப்பினர்), திரு. ஆர். எம். டபிள்யூ. எஸ். சமரதிவாகர. (உறுப்பினர்), திரு. கமல் பத்மசிறி. (உறுப்பினர்)

## இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையின் பணியாளர்கள் மற்றும் பிரிவுகளுக்கான பொறுப்பாளர்கள்



**இடமிருந்து வலம்.**

1வது வரிசை: **திரு. எம். யு. லியனாரச்சி** (பணிப்பாளர், உள்ளூர் சுற்றுலாத் துறை மற்றும் சமூகத் தொடர்பாடல்), **திரு. பி. யு. ரத்நாயக்க.** (பணிப்பாளர் நாயகம்.), **திரு. கிஷு கோமஸ்.** (தலைவர்), **திருமதி. தரங்க ரூபசிங்க.** (பணிப்பாளர் மனிதவளம் மற்றும் வளாக முகாமைத்துவம்)

2வது வரிசை: **திரு. உதான விக்ரமசிங்க** (பணிப்பாளர், தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பம்), **திரு. சந்தன விஜேரத்ன.** (பணிப்பாளர்- (கடமை நிறை வேற்று) தரம் மற்றும் தகமை உறுதிப்படுத்தல்.), **திருமதி. இனோக்கா புஞ்சிஹேவா. (சட்ட உத்தியோகத்தர்), திருமதி. கே. எம். நஹீம். (உள்ளக கணக்காளர்), திருமதி. பாகியா மகாவிதானகே.** (பணிப்பாளர்- (கடமை நிறை வேற்று) சுற்றுலா திட்டமிடல் மற்றும் அபிவிருத்தி), **திரு. சிசிர வீரசேகர** (பணிப்பாளர், சுற்றுலா விடுதி முகாமைத்துவம்), **திரு. சம்பத் கனேபலாராச்சி** (பணிப்பாளர், சிதி முகாமைத்துவம்)

## 6. உலகளாவிய சுற்றுலாத்துறை தொடர்பான முழுமையான விளக்கங்கள்




2017 ஆம் ஆண்டில உலகின் மொத்த சுற்றுலாப் பிரயாணிகளின் வருகை 1,323 மில்லியனாக உயர்வு அடைந்துள்ளதாக புள்ளிவிபரங்கள் மூலம் தெரியவந்துள்ளது. இது சென்ற வருடத்துடன் ஒப்பிடும்போது 7% அதிகமாகும். 2010 ஆம் ஆண்டு தொடக்கம் உள்ள கடந்த 7 ஆண்டுகளில் சராசரி அதிகரிப்பு 4% உடன் ஒப்பிடும் போது இவ் வருட அதிகரிப்பு சிறந்தாக காணப்படுகிறது. சுற்றுலாத்துறையின் அதிகரிப்பை சர்வதேச சுற்றுலாப் பிரயாணிகள் வருகையின் அடிப்படையில் மதிப்பிட்டால் 2018 ஆம் ஆண்டில் 4% - 5% மான அதிகரிப்பு காணப்படும்.



# 7. இலங்கை சுற்றுலாத்துறையின் ஒரு கண்ணோட்டம்




1 வது அட்டவணை : சுற்றுலாப் பிரயாணிகள் வருகை 2012 - 2017

2017 ஆம் ஆண்டில் இலங்கைக்கு 2,116,407 சுற்றுலாப் பிரயாணிகள் வருகை தந்துள்ளதுடன், 2016 ஆம் ஆண்டில் சுற்றுலாப் பிரயாணிகளின் வருகை எண்ணிக்கை 2,050,832 உடன் ஒப்பிடும் போது 32% வளர்ச்சி காணப்பட்டுள்ளது.




2 வது அட்டவணை: 2017 இல் ஒவ்வொரு மாதத்திற்குமான சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை

மேற்காட்டப்பட்டுள்ள வரைபில் குறிப்பிடப்படடவாறு 2017 ஆம் ஆண்டில் கூடுதலான சுற்றுலாப் பிரயாணிகள் ஜனவரி, பெப்ரவரி, ஜூலை மற்றும் டிசம்பர் மாதங்களில் வருகை தந்துள்ளனர். இதில் அதிகமான சுற்றுலாப் பிரயாணிகள் டிசம்பர் மாதத்திலேயே வருகை தந்துள்ளதாகவும் பதிவாகியுள்ளது.






3 வது அட்டவணை : அந்நிய செலாவணி வருவாய் (அமெரிக்க டொலர் மில்லியன்)

2017 ஆம் ஆண்டில் சுற்றுலாத்துறையின் மூலம் பெற்ற மொத்தக் அந்நிய செலாவணி வருவாய் அமெரிக்க டொலர் 3,924.9 மில்லியன் சென்ற வருட 3,518.5 மில்லியன் உடன் ஒப்பிடும் போது 11.5% அதிகமாகும்




4 வது அட்டவணை : 2017 ஆம் ஆண்டில் மிகக் கூடுதலாக சுற்றுலாப் பிரயாணிகள் வருகை தந்த முதல் 10 நாடுகள்

இலங்கைக்கு வருகை தரும் சுற்றுலாப்பயணிகளின் எண்ணிக்கை அடிப்படையில் இந்தியா 18.17 வீதத்துடன் முதலாம் இடத்திலும் சீனா 12.7 வீதத்துடன் இரண்டாம் இடத்திலும் உள்ளது. இவ் இரு நாடுகளும் மொத்த சுற்றுலாப் பிரயாணிகளின் அளவில் அண்ணலவாக மூன்றில் ஒரு பங்கு என்பது குறிப்பிடத்தக்கது.

# 8. 2017 ஆம் ஆண்டின் சாதனைகள்

## 8.1 சுற்றுலாத்துறையின் பெறுமதியை கூட்டுதல்

ஆராய்ச்சி மற்றும் சர்வதேச தொடர்பு பிரிவினால் சுற்றுலாத்துறைக்குரிய பண்புசார் மற்றும் தரம்சார் ரீதியிலான முழுமையான அறிக்கைகள் தொடற்சியாக வெளியிடப்பட்டது. சுற்றுலாப் பிரயாணிகளின் வருகை, அன்னிய நாட்டுச் செலவானி, தொழில் வாய்ப்பு, ஹோட்டல்களில் தங்கிய சுற்றுலாப்பயணிகளின் விகிதாசாரம், சுற்றுலா மேற்கொள்ளும் முறை மற்றும் சுற்றுலாப் பிரயாணிகளின் செயற்பாடுகள், சுற்றுலாப் பிரயாணிகளின் கவர்ச்சியினை வெற்றி கொண்ட இடங்கள், வசதிகள் மற்றும் பயன்படுத்தப்பட்ட சேவைகள், சுற்றுலா செலவினம் ஆகிய துறைகள் தொடர்பில் இலங்கை சுற்றுலாத்துறையின் செயற்சாதனையில் குறிப்பிடப்பட்டுள்ள மாதாந்தப் புள்ளிவிபர அறிக்கை, வருடாந்தப் புள்ளிவிபர அறிக்கை மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பிரயாணிகள் இலங்கைக்கு வெளியே செல்வது தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட ஆய்வு அறிக்கையில் இவ்வாறு முறையாக வெளியிடப்பட்ட ஒரு சில வெளியீடுகள் கீழ் காணப்படுகின்றன.



மாதாந்த புள்ளிவிபர அறிக்கை



வருடாந்த புள்ளிவிபர அறிக்கை



வெளிநாட்டு சுற்றுலாப் பிரயாணிகள் இலங்கையிலிருந்து வெளிச் செல்வது தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வு அறிக்கை

### 8.1.1 வெளிநாட்டுச் சுற்றுலாப் பிரயாணிகள் தமது சுற்றுலாவை முடித்து இலங்கையில் இருந்து வெளிச் செல்லும் போது மேற்கொள்ளப்படும் ஆய்வின் நோக்கங்கள்

- இலங்கையிலிருந்து வெளிச் செல்லும் வெளிநாட்டுச் சுற்றுலாப் பிரயாணிகள் தொடர்பாக அவர்களின் தனிப்பட்ட பின்னணித் தகவல்களை அடிப்படையாகக் கொண்டு விளக்கமான மாதிரியினைக் கட்டியெழுப்புதல்.
- பண்புசார் தரம் மற்றும் அளவீட்டு புள்ளிவிபரங்கள் ஆகிய இரு வகையிலும் மேலதிக தகவல்கள் கொண்ட சுற்றுலா கைத்தொழில் புள்ளிவிபரவியல் அடிப்படையினை பலப்படுத்தல்.
- தற்போதைய இயலுமைகள் கொண்ட சுற்றுலாப் பிரயாணிகளின் வருகைகளுக்கு அழுத்தங்களை ஏற்படுத்தக்கூடிய காரணங்களை இனங்காணுதல்.
- வியூக மூல உபாயத்தை தீர்மானிப்பதற்காக அரச மற்றும் தனியார் துறைகளுக்கு தகவல்களை பெற்றுக்கொள்ள வசதிகளை ஏற்படுத்தல்.









### 8.1.2 முதலீட்டாளர்களுக்கு உதவும் பிரிவு

இலங்கையில் சுற்றுலாத்துறையில் முதலீடு செய்யும் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டவர்கள் பல நிறுவனங்களுக்கு சென்று அங்கீகாரம் பெறவேண்டிய ஒரு நிலைமை இருந்தது. இது முதலீட்டாளர்களுக்கு பல விதமான பிரச்சனையும் வீனாக நேரத்தையும் செலவிட வேண்டி இருந்தது. எனவே முதலீடு செய்பவர்களுக்கு உதவிபுரியும் நோக்குடன் ஆரம்பத்தில் தேசிய முதலீட்டிற்கான பிரிவு அமைத்தப்பட்டது. துற்போது இதன் பெயர் மாற்றப்பட்டு முதலீட்டு இணைப்புப் பிரிவு (Investor Relations Unit - IRU) என அழைக்கப்படுகிறது.

முதலீட்டு இணைப்பு அலகு (IRU) தாபித்ததன் உள்ளக நோக்கமாக அமைவது சுற்றுலா கைத்தொழில் செயற்திட்டத்தை அங்கீகரிக்கும் செயற்பாடுகளுக்காக வசதிகளை வழங்குதல் மற்றும் நாட்டின் சுற்றுலா கைத்தொழில் முதலீட்டு செயற்திட்டத்தை அமுல்படுத்தும் பணிகளை ஆரம்பிப்பதற்காக ஏற்படக்கூடிய காலத்தை குறைப்பதன் மூலம் முதலீட்டாளர்களுக்கு எதிர்கொள்ள வேண்டி ஏற்பட்டுள்ள பிரச்சினைகளை கட்டுப்படுத்தல், முதலீட்டு இணைப்பு அலகு (IRU) தாபிப்பது வெற்றிகரமான மூல ஆரம்பமாக இருந்த போதிலும் மிகவும் இலகு படுத்தப்பட்ட முதலீட்டு அங்கீகார செயற்பாடுகளை அறிமுகப்படுத்துவதன் மூலம் முதலீடு தொடர்பான அலகு (IRU) செயற்சாதனையினை தொடர்ந்தும் விருத்தி செய்ய முடியும்.

சர்வதேச அபிவிருத்திக்கான ஐக்கிய இராட்சியத்தின் முகவர் நிறுவனம் (USAID) இலங்கையில் முதலீடுகளை துரிதப்படுத்துவதற்கு உதவி வழங்குதல், (Supporting Accelerating Investment in Sri Lanka - SAIL) செயற்திட்ட முதலீட்டு தொடர்பு அலகு (ஐசுரு) முதலீட்டு அங்கீகாரச் செயற்பாடுகளை மீள் கட்டமைப்பதற்காக உதவி வழங்க முன்வந்துள்ளது. இலங்கையின் முதலீட்டினை துரிதப்படுத்துவதற்கு உதவி வழங்குவது (SAIL) செயற்திட்டத்தின் மூலம் முதலீட்டுப் பிரிவின் (IRU) மற்றும் ஏனைய நிரல் முகவர் நிறுவனம் / தரப்பினர்களுக்கிடையே இணைப்பு பரிசோதனைக்குட்படுத்தப்படுவதுடன், செயற்திட்டத்தை அங்கீகரிக்கும் செயற்பாடுகளுக்காக கடக்கக்கூடிய காலத்தை தொடர்ந்தும் குறைப்பதற்காக மிகவும் நெருங்கி அதேபோன்று இணைப்புமிக்க செயற்பாட்டு தொடர்பாடலை பேணுவதற்கு அவசியம் என நிர்னயிக்கப்பட்டது.

எனவே சர்வதேச ரீதியில் அதிசிறந்த ஒப்பளவுகளுக்கமைவாக இப்பொதுவான நோக்கத்தை எட்டுவதற்காக மிகுந்த வினைத்திறன், பயன்பாடுகள் மற்றும் துரித செயற்பாட்டு இணைப்புகளுக்கு இணங்கி செயற்படும் நோக்குடன் இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை (SLTDA) மற்றும் ஏனைய முகவர் நிறுவனம் / தரப்பினர்களுக்கிடையில் புரிந்துணர்வு உடன்படிக்கையினைக் கைச்சாத்திட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை (SLTDA) இலங்கையின் முதலீட்டினை துரிதப்படுத்துவதற்கான உதவி வழங்குதல் (SAIL) செயற்திட்டத்துடன் இணைந்து நகர அபிவிருத்தி அதிகார சபை (UDA) தற்போது காணப்படும் அங்கீகார செயற்பாடுகளுக்கு அமைவாக செயற்பாடுகள் ஆரம்பிக்கப்படுவதுடன் 2017 ஆம் ஆண்டில் அவ்வவ் அங்கீகாரச் செயற்பாடுகளுக்காக இணக்கம் எட்டப்பட்ட கால எல்லைக்கமைய வரைவு புரிந்துணர்வு உடன்படிக்கை தயாரிக்கப்பட்டது. ஏனைய சகல நிரல் முகவர் நிறுவனங்களுக்கிடையே மீள் கட்டமைப்புச் செயற்பாடுகளும் இதற்குச் சமமாக தொடர்ந்தும் மேற்கொள்ளப்படும்.

இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை (SLTDA) 2020 ஆம் ஆண்டில் சுற்றுலா பிரயாணிகளின் வருகை 4 மில்லியான பதிவு செய்வதனை நோக்காகக் கொள்ளப்பட்டுள்ளதுடன் சுற்றுலா பொருளாதாரத்திற்காக சேவை வழங்கும் ஹோட்டல் அறைகளை 70,000 - 80,000 மாத்திரம் இதற்காக அவசியப்பட்டுள்ளது. இம் முதலீட்டு செயற்திட்டத்தின் மூலம் தேசிய அறைகளின் கொள்ளளவுடன் புதிய அறைகளை சேர்ப்பதன் மூலம் முதலீட்டு இணைப்பு அலகு (IRU) இந்நோக்கத்தை எட்டுவதற்காக திருப்திகரமான பங்களிப்பு வழங்கப்பட்டுள்ளது.

கடந்த இரு ஆண்டுகளுக்கு இணைவாக தேசிய அறைகளின் கொள்ளளவினை மேம்படுத்துவதற்காக முதலீட்டு இணைப்பு அலகு (IRU) பங்களிப்பின் மூலம் குறிப்பிடத்தக்களவு வளர்ச்சி ஏற்பட்டுள்ளதுடன் எதிர்வரும் இரு ஆண்டுகளுக்குள் தேசிய அறையின் கொள்ளளவு முன்னேற்றகரமான முறையில் விருத்தி செய்ய முதலீட்டு இணைப்புப் பிரிவின் (IRU) நோக்கமாக அமைந்துள்ளது.

முதலீட்டு இணைப்புப் பிரிவு (IRU) மூலம் வசதிகள் வழங்கப்பட்டுள்ள தற்போதைய நிர்மானிப்பதற்கான கட்டத்தின் கீழ் காணப்படும் ஹோட்டல் முதலீட்டு செயற்திட்டம் தொடர்பான புள்ளிவிபரங்களுக்கமைவாக 2017 தொடக்கம் 2020 வரையான கால எல்லைக்குள் புதிதாக 7,493 ஹோட்டல் அறைகள் சந்தையில் இணைக்கப்பட உள்ளது. அடுத்த ஈராண்டு காலப்பகுதிக்குள் முதலீட்டு இணைப்பு அலகு (IRU) ற்கு சமர்ப்பிக்க வேண்டிய புதிய செயற்திட்டங்களுடன் இவ் அறைகளின் எண்ணிக்கை தொடர்ந்தும் அதிகரிக்கும் முதலீட்டு இணைப்புப் பிரிவு (IRU) மூலம் 2010 ஆம் ஆண்டு தொடக்கம் 2017 வரையான கால எல்லைக்குள் முழுமையாக அங்கீகரிக்கப்பட்ட செயற்திட்டங்களின் எண்ணிக்கை 307 க்கு இணைவாக 2017 ஆம் ஆண்டில் 45 செயற்திட்டங்கள் அங்கீகரிக்கப்பட்டன.

இவ்வாறு அங்கீகரிக்கப்பட்ட செயற்திட்டங்களின் முதலீடுகள் 380 மில்லியன் அ.டொலர் என்பதுடன் அச் செயற்திட்டங்களின் அமைவிடம் கீழ்க் குறிப்பிட்டவாறு அமைகின்றது.

| மாவட்டம் | 2017 ஆம் ஆண்டில் வழங்கப்பட்ட இறுதி அங்கீகாரங்கள் | | |
|---|---|---|---|
| | செயற்திட்ட அங்கீகாரங்கள் | அறைகள் | முதலீடு மில்லியன் அ.டொலா |
| அம்பாறை | 1 | 16 | 0.63 |
| அனுராதபுரம் | 1 | 17 | 0.33 |
| பதுளை | 4 | 183 | 7.50 |
| கொழும்பு | 4 | 928 | 200.38 |
| குாலி | 8 | 514 | 40.26 |
| கம்பஹா | 2 | 72 | 4.03 |
| ஹம்பாந்தோட்டை | 4 | 65 | 15.79 |
| யாழ்ப்பாணம் | 3 | 46 | 51.33 |
| களுத்துறை | 4 | 102 | 5.77 |
| கண்டி | 2 | 34 | 2.15 |
| கேகாலை | 1 | 50 | 3.90 |
| மாத்தளை | 1 | 18 | 0.34 |
| மாத்தறை | 3 | 250 | 41.57 |
| புத்தளம் | 3 | 40 | 1.43 |
| திருகோணமலை | 3 | 53 | 4.33 |
| இரத்தினபுரி | 1 | 5 | 0.03 |
| மொத்தம் | **45** | **2393** | **379.77** |

5 வது அட்டவணை : 2017 ஆம் ஆண்டில் இறுதி அங்கீகாரம் வழங்கப்பட்ட செயற்திட்டங்கள்

2017 ஆம் ஆண்டில் டிசம்பர் 31 ஆம் திகதி வரை அங்கீகரிக்கப்பட்ட 307 செயற்திட்டங்களில் இதுவரையில் நிர்மாணப் பணிகள் மேற்கொள்ளப்படும் செயற்திட்டங்கள் தொடர்பான விபரங்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.

| மாவட்டங்கள் | செயற்திட்ட எண்ணிக்கை | அறைகள் | முதலீடுகள் மில்லியன் அ.டொலா |
|---|---|---|---|
| அம்பாறை | 1 | 10 | 0.58 |
| மட்டக்களப்பு | 3 | 74 | 11.13 |
| பதுளை | 5 | 203 | 11.6 |
| கொழும்பு | 18 | 3247 | 919.68 |
| காலி | 17 | 1084 | 96.732 |
| கம்பஹா | 6 | 569 | 57.5 |
| ஹம்பாந்தோட்டை | 9 | 292 | 62.575 |
| யாழ்ப்பாணம் | 3 | 106 | 106 |
| களுத்துறை | 10 | 584 | 96.002 |
| கண்டி | 4 | 58 | 3.984 |
| கேகாலை | 1 | 50 | 3.9 |
| மாத்தளை | 3 | 126 | 5.963 |
| மாத்தறை | 8 | 239 | 19.451 |
| நுவரெலியா | 4 | 476 | 54.16 |
| புத்தளம் | 3 | 117 | 7.39 |
| திருகோணமலை | 7 | 170 | 21.68 |
| மன்னாா் | 1 | 52 | 52 |
| வவுனியா | 2 | 36 | 5.09 |
| **மொத்தம்** | **105** | **7493** | **1360.152** |

6 வது அட்டவணை : 2017 டிசம்பர் 31 ஆம் திகதியன்று நிர்மானப் பணிகள் மேற்கொள்ளப்படும் செயற்திட்டங்கள்

**2017 டிசம்பர் 31 ஆம் திகதியன்று நிர்மானப் பணிகள் மேற் கொள்ளப்படும் செயற்திட்டங்கள்**




7 வது அட்டவணை : 2017 ஆம் ஆண்டில் நிர்மானக் கட்டத்திலுள்ள செயற்திட்டங்கள்

2017 ஆம் ஆண்டில் டிசம்பர் 31 ஆம் திகதியளவில் மொத்தமாக 307 செயற்திட்டங்களில் 157 செயற்திட்டங்கள் அங்கீகரிக்கப்பட்டது. இச் செயற்திட்டங்கள் காரணமாக 8,182 அறைகள் பாவனைக்கு வந்தது.

## 8.2. கூட்டிட முகாமைத்துவம் மற்றும் அபிவிருத்தி

கூட்டிட முகாமைத்துவப் பிரிவினால் 04 வர்த்தக விடுமுறை கூட்டிடம், வர்த்தகமல்லாத 02 கூடடிடங்கள்ளின் முகாமைத்துவப் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. அத்துடன் இப்பிரிவு தனியாா் துறையின் தனிநபர்களுக்காக குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ள அறைகள் விடுதி (பொது நிருவாக அதிதிகள் விடுதி) 37 இன் தர நிருவாகச் செயற்பாடுகளில் ஈடுபடுகின்றது.

### 8.2.1. வர்த்தக கூட்டீடங்கள்

நுவரெலியா, பண்டாரளவெல, கதிர்காமம் மற்றும் அனுராதபுரத்தில் அமைந்துள்ள தேசிய விடுமுறை விடுதி நாட்டின் சிறந்த இடங்களில் அமைந்துள்ளது. விசேடமாக உள்நாட்டு சுற்றுலாப் பிரயாணிகளுக்கு ஏற்றவாறான விலையில் உணவு, பாணங்கள் உட்பட இவ் விடுமுறை விடுதிகளில் தங்குமிட வசதிகள் வழங்கப்படுகின்றன.

சுற்றுலாப் பிரயாணிகளுக்கு திருப்தியடைவதற்கு ஏற்றவாறான வேலைத்திட்டங்களை நடாத்துதல், மின்கலங்களைப் பொருத்துதல் மற்றும் உயர்தரத்திலான கட்டில் விரிப்புக்கள், மேசைத் துணி போன்றவைகள் மற்றும் மனைப் பொருட்களை வழங்குவதன் மூலம் இவ் விடுமுறை விடுதிகளின் தரத்தை மேம்படுத்தல் மற்றும் அபிவிருத்தி செய்ய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டதுடன் மேலே குறிப்பிடப்பட்ட விடயங்களுக்கு மேலதிகமாக நாட்டின் உள்நாட்டு சுற்றுலாப் பிரயாணிகளை கவர்ச்சிக்குட்படுத்துவதற்காக நாளாந்தம் மேற்கொள்ள வேண்டிய பராமரிப்புப் பணிகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன.

தேசிய விடுமுறை விடுதி பண்டாரவெல, - ரூபா 4.0 மில்லியன் செலவிடப்பட்டது.
தேசிய விடுமுறை விடுதி நுவரெலியா - ரூபா 4.5 மில்லியன் செலவிடப்பட்டது.
தேசிய விடுமுறை விடுதி கதிர்காமம் - ரூபா 1.5 மில்லியன் செலவிடப்பட்டது.
தேசிய விடுமுறை விடுதி அனுராதபுரம் - ரூபா 1.6 மில்லியன் செலவிடப்பட்டது.

இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையினால் (SLTDA) கீழ்க் குறிப்பிடப்பட்ட செயற்பாடுகள் பூர்த்தி செய்யப்பட்டன.

| | |
|---|---|
| அனுராதபுரத்தில் 13 அறையினை புனரமைத்தல் | 21 மில்லியன் ரூபா |
| கதிர்காமத்தில் புதிய கழிவகற்றல் தொகுதியினை நிர்மானித்தல் | 5 மில்லியன் ரூபா |
| அனுராதபுரத்தில் 16 அதிதிகளின் அறையினை புதிதாக நிர்மானித்தல் | 45% பூர்த்தி செயப்பட்டுள்ளது |

8 வது அட்டவணை : இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை (SLTDA) மூலம் பூரணப்படுத்தப்பட்ட பணிகள்

## 8.2.2. தேசிய சுற்றுலா தலங்கள்

### பாசிக்குடா சுற்றுலாதலம்

தனியார்துறை முதலீட்டை சுற்றுலாத்துறையில் ஊக்குவிப்பதற்காக அமைக்கப்பட்ட சுற்றுலாத்தலம் பாசிக்குடா பிரதேசத்தில் அமைந்துள்ளது. இவ் தேசிய விடுமுறை விடுதியினை அபிவிருத்தி செய்வது தொடர்பில் 2010 விளக்கமான திட்டங்கள் பின்பற்றப்படுகின்றன. மட்டக்களப்பு மாவட்டத்தில் கிழக்கு கரையோரத்திற்கு சுற்றுலாப் பிரயாணிகளை கவர்ச்சிக்குட்படுத்துவதற்காக 2010 ஆம் ஆண்டில் பாசிக்குடா பிரதேசத்தில் அமைந்துள்ள வர்த்தகமல்லாத தேசிய விடுமுறை விடுதியினை அபிவிருத்தி செய்வதற்காக விளக்கமான பிரதான திட்டங்களை தயாரிக்கும் பணிகள் பூர்த்தி செய்யப்பட்டன.

பாசிக்குடா பிரதேசத்தில் அமைந்துள்ள தேசிய விடுமுறை விடுதியின் ஹோட்டல் நிர்மானிப்பிற்காக தனியார் துறைக்கு 14 காணித்துண்டுகள் குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ளன. இவ் 14 காணித் துண்டுகளில் 12 ஹோட்டல் நிர்மானிக்கும் பணிகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளது. பாசிக்குடா பிரதேசத்தில் அமைந்துள்ள தேசிய விடுமுறை விடுதி வினைத்திறன் மற்றும் பயன்மிக்கதாக முன்னெடுப்பதற்காக இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை (SLTDA) மூலம் மின்சாரம், நீர் மற்றும் கழிவகற்றல் சுத்திகரிப்பு தொழிற்சாலை போன்ற அடிப்படை உட்கட்டமைப்பு வசதிகள் வழங்கப்பட்டுள்ளன. ஹோட்டல்களில் செயற்பாட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டதை தொடர்ந்து கிழக்குக் கரையோரம் சார்ந்த சமூகத்திற்கு நேரடியாக மற்றும் மறைமுகப் பயன்கள் கிடைக்கப் பெற்றுள்ளன.

2016 ஆம் ஆண்டில் பாசிக்குடா தேசிய விடுமுறை விடுதிக்காக மேற்கொள்ளப்பட்ட முதலீடு 180.5 மில்லியன் இலங்கை ரூபா என்பதுடன் முதலீட்டு அளவு கீழ்க் குறிப்பிடப்பட்டவாறு வகைப்படுத்த முடியும்.

- 210 தெருவிளக்குகளை வடிஅமைத்து நிர்மானத்திற்காக 46 மில்லியன் ரூபா.
- பிரதான பிரதேச வீதியில் இரணிடாம் கட்டத்தின் திட்டமிடலுக்காக 20 மில்லியன் ரூபா.
- நீர் சுத்திகரிப்பிற்காக 100 மில்லியன் ரூபா.
- நிலத்திற்குக் கீழ் நீர்ப் பம்பி மற்றும் பாதுகாப்பு கூடங்களை நிர்மானிப்பதற்காக 14.5 மில்லியன் ரூபா.

பென்தொட்டயில் அமைந்துள்ள விடுமுறை விடுதி மூலம் ஹோட்டல் உரிமையாளர்களுக்கு பொது கழிவகற்றல் சுத்திகரிப்பு வசதிகள் மற்றும் நீர் வழங்கப்படுகின்றது. இதற்கு மேலதிகமாக இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை மூலம் (SLTDA) விடுமுறை விடுதிக்காக முழுமையான பாதுகாப்பு மற்றும் சுத்தப்படுத்தும் சேவைகள் வழங்கப்படுகின்றன. "சுளங்கா" பங்களாவை புனர் அமைக்க் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இவ் ஆண்டு இறுதியில் 35% பூர்த்தி செய்யப்பட்டுள்ளது.

சுற்றுலாத்துறைக்காக தொடர்ந்தும் பெறுமதி சேர்க்கும் வகையில் சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை (SLTDA) மூலம் நேரடி வர்த்தகத்திற்காக அனுமதிப்பத்திரங்களை வழங்கும் முறைமை (OTBLS) ஆரம்பிக்கப்பட்டதுடன். இதன் மூலம் சகல சுற்றுலா கைத்தொழில் சேவை வழங்குனர்களுக்கு இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபைக்கு (SLTDA) நேரடியாக சமூகமளிப்புத் தேவை நீக்கப்படுகின்றது. இதற்கு மேலதிகமாக சுற்றுலா அபிவிருத்தி (TDL) வரி கொடுப்பனவு செயற்பாடுகளை துரிதப்படுத்துவதற்காக சுற்றுலா அபிவிருத்தி வரி (TDL) கொடுப்பனவு முறைமை அறிமுகப்படுத்தப்பட்டது.

## 8.2.3. விடுமுறை விடுதியினை அபிவிருத்தி செய்தல்

### கற்பிட்டி

கற்பிட்டி பிரதேசத்தை ஒரு சுற்றுலா மையமாக மாற்றும் நோக்குடன் அதன் உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் போக்கு வரத்து வசதிகள் செயப்பட்டுவருகிறது. இவ் வேலைத்திட்டங்கனை மற்றைய அரச நிறுவனங்னளுடன் சேர்ந்து செயல்படுவதில் பல சிரமங்கள் காணப்படுகிறது.

சுற்றாடல் அடிப்படையில் உணர்வபூர்வமாக "கடல் அடிப்படையாகக் கொண்ட தீவு விடுமுறை விடுதி" ஆகிய புதிய ஆக்கங்கள் இலங்கையில் தாபிப்பதனை இலக்காகக் கொண்டு கூட்டிணைந்த சுற்றுலாத்துறையின் விடுமுறை விடுதியாக கற்பிட்டி 2014 ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்டது.

முதலாவது கட்டத்தின் கீழ் இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையின் 12 தீவுகள் சுவிகரிக்கப்பட்டதுடன் வியூக சூழல் கற்கையுடன் பிரதான அபிவிருத்தித் திட்டங்கள் அபிவிருத்தி செய்யப்பட்டன.

இவ் விடுமுறை விடுதி ஒல்லாந்தர் குடா, போர்த்துக்கள் குடா, காரைதீவு, இப்பன்தீவு, பெரியராட்சி, எருமைதீவு, சின்னராட்சியல், ஒட்டல்கரல் தீவு, பண்டன்குண்டு, பள்ளியவத்த மற்றும் வேலாய் போன்ற மிகவும் கவர்ச்சிமிக்க 09 தீவுகளில் இந்த விடுமுறை விடுதியில் அடங்கியுள்ளது.

மொத்த அபிவிருத்திப் பிரதேசம் 5,000 ஏக்கராகவும் 4,000 அறைகள் நிரிமானிப்பதற்கு திட்டம் இடப்பட்டுள்ளது. இதன் மூலம் நேரடியாக 16,000 தொழில் வாய்ப்புக்கள் உருவாகின்றன. ஊதாரணமாக ஒரு அறையை அமெரிக்க டொலர் 150 க்கும் சராசரியாக 80 விகித அறைகள் விற்கப்பட்டால் மொத்தமாக அமெரிக்க டொலர் மில்லியன் 175 ஒரு வருடத்திற்கு பெறமுடியும்.



அரசாங்கத்தின் கொள்கைகளில் மாற்றங்கள் காரணமாக 2010 ஆம் ஆண்டில் பொருளாதார அபிவிருத்தி அமைச்சினால் அமைச்சரவை அங்கீகாரத்தை பெற்ற 14 கம்பனிகளில் 2 கம்பனிகள் மாத்திரம் எதிர்காலச் செயற்பாடுகளை மேற்கொள்ள விருப்பம் தெரிவித்துள்ளன.

பல்வேறுபட்ட காரணங்களுக்கமைய முழுமையாக 2 யோசனைகளுக்காக அங்கீகாரங்கள் எதிர்பார்க்கப்படுகின்றன. முதலாவது Sun Resort Lanka (Pvt) Ltd வேலாய் தீவிற்குப் புறம்பாக நீர் பங்களாவை நிர்மானிப்பதற்கு விருப்பத்துடன் இருப்பதுடன் இதற்காக கடற் பரப்பினை குத்தகைக்கு வழங்குவதும் அவசியமாக உள்ளது. இவ்வாறான குத்தகை இதுவரையில் கடற்பரப்பினை குத்தகைக்கு வழங்கும் செயற்பாடுகள் இலங்கையில் மேற்கொள்ளப்படவில்லை என்பதனால் கற்பிட்டி பிரதேச செயலாளரினால் தாமதம் ஏற்பட்டுள்ளது.

இரண்டாவதாக Qube Lanka Leisure (Pvt) Ltd. இப்பன் தீவு மீது நிர்மானப் பணிகளை மேற்கொள்ள விருப்பதுடன் இருப்பதுடன் அவர்கள் இதுவரையில் குத்தகைக் கூலியாக 08 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலம் பூராகவும் தொடர்ச்சியாக நிதி செலுத்துகின்றனர். மாற்று இடம் ஒன்றிற்கு செல்வதற்கு விரும்பமின்றி இருப்பதனால் இக்காலப்பகுதியில் தீவின் ஒரு பகுதியில் வதியும் கடற்தொழில் சமூகம் தொடர்பில் கருத்திற் கொள்ள வேண்டிய பிரச்சினைகள் உருவாகியுள்ளன.

### குச்சவெளி

குச்சவெளியில் தனியார் முதலீட்டாலர் உதவியுடன் ஒரு சுற்றுலா மையம் அமைக்கப்படவுள்ளது. ஆரம்பத்தில் கூடுதலான குத்தகை தெகையை செலுத்த வேண்டியுள்ளதால் தனியார் துறையினரால் பெரிதாக நாட்டம் காட்டப்படவில்லை. இதன் காரணமாக இச்சுற்றுலாத்தலத்தை முன்எடுத்து செல்வதில் தாமதம் காணப்படுகிறது.

திருகோணமலைக்கு அண்மையிலுள்ள கிழக்குக் கரையில் கரையோர விடுமுறை விடுதியாக குச்சவெளித் தீவு 2010 ஆம் ஆண்டில் முதலில் உருவானது. இரக்கண்டி மற்றும் சலப்பையாறு பாலங்களுக்கிடையே அமைந்துள்ள கரையோரத்தில் 510 ஏக்கர் காணியில் இச் செயற்திட்டம் அடங்கியுள்ளது.

இவ்விடத்தில் மிகவும் தரமான வீதி, மின்சாரம் மற்றும் நீர் காணப்படுகின்றது. இச் செயற்திட்டங்கள் மூலம் 3,500 அறைகளைத் தாபிக்கவும் 14,000 தொழில் வாய்ப்புக்களை உருவாக்குவதற்கும் ஒரு வருடத்திற்கு 150 மில்லியன் அ.டொலர் வருமானத்தைக் பெற்றுக் கொள்வதற்கும் எதிர்பார்க்கப்படுகின்றது. (ஒரு அறை 150 அ.டொலர் என்ற அடிப்படையில் சராரரி 80% பாவனையில்)

இலங்கையின் பிரதான விமான நிலையத்திலிருந்து வீதி ஊடாக திருகோணமலையினை எட்டுவதற்கு 8 மணித்தியாலங்கள் எடுக்கும். தனியார் விமானக் கம்பனி மூலம் உள்நாட்டு விமானச் சேவைகள் நடாத்தப்படவேண்டிய தேவையும் உள்ளது. இவ்வாறான பிரச்சனைகள் காணப்படுவதால் தனியாரிடமிருந்து 20 மில்லியன் ரூபா ஆரம்ப குத்தகைக் கொடுப்பனவினை ஒரு ஏக்கருக்கு செலுத்துவதில் ஆர்வம் காட்டப்படவில்லை.

இது எவ்வாறாக இருப்பினும் Uga Escapes Management (Pvt) Ltd. மூலம் மிகவும் சொகுசுமிக்க வசதியாக இவ்விடத்தை செயற்படுத்தும் ஒரேயொரு விடுமுறை விடுதி செயற்பாட்டாளராக Jungle Beach Resort விடுதி வசதிகள் அடுத்த 03 சேவை மாதங்களுக்கு முன்னர் முழுமையாக ஒதுக்கி பூர்த்தி செய்யதுள்ளமை மிக முக்கியமான விடயமாக வலியுறுத்தப்பட வேண்டும்.

பல்வேறுபட்ட தடைகளைப் புரிந்து கொள்வதைப் போன்று தற்போதைய நிலைமையில் இப்பிரச்சினைகளை தீர்ப்பதற்காக பிரதமர் அலுவலகத்தின் ஆரம்பத்தின் கீழ் பேராசிரியர் மெட் அன்ரூஸ் இன் தலைமையில் காவெட் பல்கலைக்ககழத்தில் சர்வதேச அபிவிருத்தி தொடர்பான மத்திய நிலையம் (CID) நிபுனத்துவ குழுவுடன் 2016 ஆகஸ்ட் மாதத்தில் செயற்திட்டம் ஆரம்பிக்கப்பட்டது.

இலங்கை முதலீட்டு சபை மற்றும் இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை (SLTDA) உத்தியோகத்தர்களுடன் காவெட் பல்கலைக்கழகத்தின் வசதிகள் வழங்குவோர் இக்குழுவில் அடங்கியதுடன் இது 2017 ஆம் ஆண்டின் நடுப்பகுதி வரை நடாத்தப்பட்டது. சமூகத்திற்காக வருமான மார்க்கத்தை உருவாக்குவதுடன் இவ் விடுமுறை விடுதிக்கு வருகைதரும் சுற்றுலா பிரயாணிகளுக்காக நேரடி அனுபவங்களை வழங்கும் வகையிலான தொனிப்பொருளை கொண்ட 3 கிராமங்கள் (கடற்தொழில் கிராமம், கைத்தறி கிராமம் மற்றும் விவசாய கிராமம்) உள்ளடக்கி குச்சவெளி பசுமையான கூட்டிணைந்த விடுமுறை விடுதிக்காக எண்ணக்கரு அடிப்படையிலான திட்டங்கள் தயாரிக்கப்பட்டன.

### யால வனவள விடுமுறை விடுதி (YWR)

யால வனவள விடுமுறை விடுதி (YWR) குறிப்பிடத்தக்களவு முன்னேற்றம் மற்றும் அபிவிருத்தி அடைந்துள்ளது. விடுமுறை விடுதியில் வட பகுதியில் புதிய அதிசக்தி வாய்ந்த மின் வழங்கல் தொகுதி தாபிக்கப்பட்டுள்ளதுடன், வடபகுதியில் பிரவேச பொது வீதியும் பூரணப்படுத்தப்பட்டுள்ளது.

Uga Escapes Management (Pvt) Ltd. மூலம் நிர்வகிக்கப்படும் Chena huts உம் Wild Coast Lodge (Pvt) Ltd. மூலம்

நிர்வகிக்கப்படும் Wild Coast Tented Lodge கம்பனியும் வர்த்தகச் செயற்பாடுகளை ஆரம்பித்துள்ளன.

வன விலங்குகளை பார்வையிடுவதற்காக கூடுதலான விருப்பம் காண்பிக்கும் நபர்களுக்காக அவர்கள் வனவள உயிரினங்களுக்கிடையில இருந்து வன விலங்குகளை பார்வையிடுவதில் அனுபவங்களைப் பெற்றுக்கொள்ளும் மிக உயரிய பெறுமதி கொண்ட சுற்றுலா வளமாக யால வனப் பூங்கா (YWR) அமைந்துள்ளது. இவ் விடுமுறை விடுதி யால தேசிய பூங்காவிற்கு அண்மையில் அமைந்துள்ளதுடன், பாதுகாப்பு வலயத்திற்கு ஒரு மைல் வெளியே அமைந்துள்ளது.

வனவளப் பூங்கா மற்றும் யால வனப் பூங்கா (YWR) இடைப்பட்ட வேலிகள் அல்லது ஏனைய ஒதுக்கீடுகள் இன்மையினால் சுற்றுலா பிரயாணிகள், வன விலங்குளுக்கிடையே இருந்து வன விலங்குகளை பார்வையிடுதல் போன்ற அனுபவங்கள் கிடைக்கின்றன. யால பூங்காவில் (YWR) 07 முதலீட்டாளர்களில் ஊநயெ ரவள கம்பனி வர்த்தகச் செயற்பாடுகளை ஆரம்பித்த முதலாவது கம்பனி என்பதுடன் Wild Coast Tented Lodge கம்பனியும் 2017 ஆம் ஆண்டில் இங்கு செயற்பாட்டுப் பணிகளை ஆரம்பித்தனர்.

R&R Company (Ltd) மற்றும் Ascot Leisure (Pvt) Ltd என்ற கம்பனி தொடர்ந்தும் நிர்மானப் பணிகளை ஆரம்பிக்கவில்லை.

### தேத்துவ லேக் ரிசோர்ட்

இச் செயற்திட்டம் இதன் முதற் கட்டங்களின் கீழ் அமுல்படுத்தப்படுவதுடன் பொறுப்பேற்க திட்டமிடப்பட்ட 1,800 ஏக்கர்களில் 1,732.03 ஏக்கரை பொறுப்பேற்கும் செயற்பாடுகள் தற்போது அமுல்படுத்தப்பட்டுள்ளன. இத் தேத்துவ லேக் ரிசோர்ட்டின் எல்லையாக அமைவது ஜொப்றி பாபாவின் உப்பு கங்கை இல்லம் மற்றும் சொத்துக்களாகும். இது பென்தொட்ட கிழக்கில் அமைந்துள்ளதுடன், நீர் சதுப்பு நிலம் மற்றும் கைவிடப்பட்ட வயற் காணிகளும் அடங்கியுள்ளன.

இச் சேவைத் தளத்தை அடிப்படையாகக் கொண்டு உப்பு கங்கையின் காணி மாதிரியாக கருத முடியும். இக்காணியின் எதிர்கால அபிவிருத்திச் செயற்பாடுகளுக்காக இலங்கை சுற்றுலா அபிவிருத்தி சபை (SLTDA) தெற்கு அபிவிருத்தி அதிகார சபையுடன் இணைந்து திட்டங்களை தயாரித்துள்ளது.

இதற்கமைய எதிர்வரும் காலங்களில் இதனை கவர்ச்சிமிக்க காணியின் ஒரு பகுதியில் முதலீடு செய்வதற்காக தனியார் துறைக்கு முதலீட்டிற்கான வாய்ப்புக் கிடைக்கின்றது.

### 8.2.4 சுற்றுலாத்துறையை அபிவிருத்தி செய்வதற்காக புதிய காணியினை இனங்காணுதல்.

சுற்றுலாத்துறையை விருத்தி செய்வதற்காக கீழ்க் குறிப்பிட்ட காணி இனங்காணப்படுவதுடன் இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையின் (SLTDA) பணிப்பாளர் சபை மூலம் இக்காணியினை சுவிகரிக்கும் / பொறுப்பளிக்கும் செயற்பாடுகளை எதிர்வரும் காலங்களில் முன்னெடுப்பதற்காக அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

| இனங்காணப்பட்ட காணி | காணியின் அளவு ஏக்கர்களில் (மொத்த அடிப்படையில்) |
|---|---|
| அக்குறள | 493.00 |
| பொகவந்தலாவ | 316.00 |
| வாழைச்சேனை | 265.00 |
| தெனியாய | 350.00 |
| கொஹிலவகுர | 27.60 |
| முல்லேரியா, வெலிவிட்ட (மாலம்பே கடுகதி வீதியிலிருந்து வெளிப்படல்) | 36.00 |

9 வது அட்டவணை : சுற்றுலாக் கைத்தொழிலை அபிவிருத்தி செய்வதற்காக புதிய காணியினை இனங்காணல்.

## 8.3 தரம் மற்றும் தர உறுதிப்பாடுகள்

### 8.3.1 சுற்றுலா நிறுவனங்களை பதிவு செய்தல் மற்றும் அனுமதிப்பத்திரத்தை புதுப்பித்தல்

சுற்றுலா நிறுவனங்கள் மற்றும் சேவை வழங்குனர்களை பதிவு செயதல் மற்றும் அனுமதிப்பத்திரங்களை வழங்குதல் தரம் மற்றும் தர உறுதிப்பாட்டில் பிரதான முக்கியத்துவம் வாய்ந்த பணியாகும்.

இதற்காக முறையான பரிசோதனைகள் மேற்கொள்ளப்படுகின்றன. ஹோட்டல், அதிதிகளின் இல்லம் மற்றும் உணவகங்களுக்காக மதுபான அனுமதிப்பத்திரம் வழங்குதற்காக திணைக்களத்தின் பரிந்துரையினைச் சமர்ப்பித்தல்



சுற்றுலா திணைக்களங்களின் வெளிநாட்டு பணியாளர் சபைக்கு இலங்கையில் தொழில்வாய்ப்பக்களில் ஈடுபடுவதற்காக வீசா வழங்குவதற்காக குடிவரவு குடியகழ்வு திணைக்களத்திற்கு பரிந்துரைகளை சமர்ப்பிப்பதும் இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையினால் (SLTDA) நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன.

இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையில் (SLTDA) பதிவு செய்யப்பட்டுள்ள சுற்றுலா நிறுவனங்களின் எண்ணிக்கை கீழ்ே குறிப்பிடப்பட்டுள்ளன.

| வகைகள் | 2017.01.01 ஆம் திகதி தொடக்கம் 2017.12.31 ஆம் திகதி வரை | | இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையில் பதிவு செய்யப்பட்டுள்ள மொத்த எண்ணிக்கை | |
|---|---|---|---|---|
| | அலகு | அறைகள் | அலகு | அறைகள் |
| வகைப்படுத்தப்பட்ட சுற்றுலா ஹோட்டல் | 25 | 2,944 | 139 | 12,751 |
| ஐந்து நட்சத்திரம் | 3 | 704 | 20 | 4,217 |
| நான்கு நட்சத்திரம் | 2 | 294 | 18 | 2,092 |
| மூன்று நட்சத்திரம் | 9 | 1,245 | 25 | 2,957 |
| இரண்டு நட்சத்திரம் | 5 | 264 | 36 | 1,718 |
| ஒரு நட்சத்திரம் | 6 | 437 | 40 | 1,767 |
| வகைப்படுத்தப்படாத சுற்றுலா ஹோட்டல் | 24 | 1,694 | 239 | 10,482 |
| டீழரவஙைரந ஹோட்டல் | 3 | 86 | 26 | 508 |
| டீழரவஙைரந விலா | 3 | 15 | 35 | 224 |
| விருந்தினர் வீடுகள் | 47 | 699 | 884 | 9,549 |
| வீடுகளில் தங்குமிட வசதிகள் | 87 | 224 | 363 | 1,092 |
| பங்களா | 53 | 226 | 338 | 1,422 |
| பாரம்பரிய பங்களா | 0 | 0 | 4 | 19 |
| பராம்பரிய இல்லம் | 1 | 1 | 2 | 8 |
| வாடகைக்கு வழங்கிய தொடர்மாடி வீடுகள் | 9 | 31 | 61 | 176 |
| வாடகைக்கு வழங்கிய இல்லங்கள் | 0 | 0 | 6 | 19 |
| **மொத்தம்** | **252** | **5,920** | **2,097** | **36,250** |

10 வது அட்டவணை : தங்குமிடங்களை வழங்கும் பிரிவுகள்

| வகைகள் | 2017.01.01 ஆம் திகதி தொடக்கம் 2017.12.31 ஆம் திகதி வரை | இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையில் பதிவு செய்யப்பட்டுள்ள மொத்த எண்ணிக்கை |
|---|---|---|
| உணவகங்கள் | 31 | 469 |
| சுற்றுலா முகவர் நிறுவனம் | 90 | 832 |
| ஸ்பா மற்றும் ஆரோக்கிய மத்திய நிலையம் | 18 | 58 |
| சுற்றுலா வர்த்தக நிறுவனங்கள் | 3 | 73 |
| நீர் சார்ந்த விளையாட்டு மத்திய நிலையம் | 8 | 25 |
| வாசனைத்திரவிய மரத்தோட்டம் | 1 | 35 |
| **மொத்தம்** | **151** | **1,492** |

11 வது அட்டவணை : விசேட சுற்றுலா சேவை

| வகைகள் | 2017.01.01 ஆம் திகதி தொடக்கம் 2017.12.31 ஆம் திகதி வரை | இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையில் பதிவு செய்யப்பட்டுள்ள மொத்த எண்ணிக்கை |
|---|---|---|
| தேசிய சுற்றுலா வழிகாட்டல் விரிவுரையாளர்கள் | 55 | 1,365 |

| | | |
|---|---|---|
| சாரதி சுற்றுலா வழிகாட்டல் விரிவுரையாளர்கள் | 59 | 1,135 |
| பிரதேச சுற்றுலா வழிகாட்டல் விரிவுரையாளர்கள் | 15 | 526 |
| குறிப்பிட்ட சுற்றுலா வழிகாட்டல் விரிவுரையாளர்கள் | 0 | 89 |
| **மொத்தம்** | **129** | **3,115** |

12 வது அட்டவணை : சுற்றுலா மற்றும் வழிகாட்டுனர் சேவை

### 8.3.2 ஹோட்டல்களை வகைப்படுத்தல்

சுற்றுலா ஹோட்டல்களை வகைப்படுத்துவது தொடர்பில் இலக்கம் 1963/28 கொண்ட 2016. ஏப்ரல் 20 ஆம் திகதி அறிமுகப்படுத்தப்பட்டுள்ள புதிய வர்த்தமாணி அறிவித்தலுக்கமைய சகல சுற்றுலா ஹோட்டல்களையும் வகைப்படுத்துவது கட்டாயத் தேவையாக மாற்றம் பெற்றுள்ளது. தமது வர்த்தமாணி அறிவித்தலுக்கமைய சுற்றுலா ஹோட்டல்களை வகைப்படுத்துவதற்காக ஹோட்டல் வகைப்படுத்தல் குழுவினால் விரிவான பரிசோதனைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

2017 ஆம் ஆண்டில் 25 ஹோட்டல்கள் கீழ்க் குறிப்பிடப்பட்டவாறு வகைப்படுத்தப்படுகின்றன.

5 நட்சத்திர ஹோட்டல் - 03
4 நட்சத்திர ஹோட்டல் - 02
3 நட்சத்திர ஹோட்டல் - 09
2 நட்சத்திர ஹோட்டல் - 05
1 நட்சத்திர ஹோட்டல் - 06

### 8.3.3 வழிகாட்டல் ஆலோசனைகளை வகுத்தல் மற்றும் சுற்றுலா சேவைகளை தரப்படுத்த தேவையான வர்த்தமாணி அறிவித்தலை வெளியிடல்.

கீழ்க் குறிப்பிடப்பட்ட பூரணப்படுத்தப்பட்ட வழிகாட்டல் ஆலோசனை வர்த்தமாணி அறிவித்தலை பிரசுரிப்பதற்காக சட்ட வரைஞர் திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டது.

- சுயாதீன சுற்றுலா உணவகம்
- விருந்தினர் வாடிவீடுகள்
- தொடற்மாடி ஹோட்டல்
- ஆயுள்வேத ஹோட்டல்.
- ஆயுள்வேத ஆரோக்கிய சேவை மத்திய நிலையங்கள்
- சுற்றுலா கடைகள்
- ஸ்பா (Spa) மற்றும் ஆரோக்கிய மத்திய நிலையங்கள்

சட்ட வரைஞர் திணைக்களத்தின் மேற்பார்வை மற்றும் பரிந்துரைகளுக்காக கீழே குறிப்பிடப்பட்ட ஆலோசனைகளின் இறுதி வரைபு சட்ட வரைஞர் திணைக்களத்திற்கு கையளிக்கப்பட்டுள்ளது.

- சுற்றுலா வழிகாட்டல் ஆலோசனை சேவை
- வாசனைத்திரவிய மர பூங்காக்கள்
- வாகன சவாரி சுற்றுலா
- சுற்றுலா முகாமைத்துவக் கம்பனி

பிரதமர் அலுவலகத்தின் மத்திய செயற்பாட்டு முகாமைத்துவப் பிரிவின் ஆலேசனைகளுக்கமைய சகல சாகச சுற்றுலா செயற்பாடுகளுக்காக வழிகாட்டல் ஆலோசனைகளை வகுக்கும் செயற்பாடுகள் ஏற்கனவே அமுல்படுத்தப்பட்டுள்ளன.

நிலம், நீர் மற்றும் ஆகாயம் சார்ந்த சாகச சுற்றுலா செயற்பாடுகளுக்காக ஆலோசனைக் குழு நியமிக்கப்பட்டுள்ளதுடன் ஆலோசனைக் குழுக் கூட்டமும் நடாத்தப்பட்டுள்ளது.

### 8.3.4 தரம் மற்றும் சேவைத் தரங்களை மேம்படுத்தல்

சுற்றுலா மற்றும் ஹோட்டல் முகாமைத்துவம் தொடர்பான இலங்கை நிறுவகத்தில் 2017 ஆகஸ்ட் 23 ஆம் திகதி பயிற்சி வேலைத்திட்டங்கள் நடாத்தப்பட்டதுடன் உள்நாட்டு குடும்பங்களில் வசிக்கும் வீட்டு அலகுகளின் சுற்றுலா செயற்பாடுகளுக்கான பணிகளை முன்னெடுக்கும் 106 பேர்களுக்காக இப்பயிற்சி வேலைத்திட்டங்களில் பங்கேற்றதற்கு சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.







### 8.3.5 கொழும்பு மற்றும் தெஹிவளை/ கல்கிஸ்சை மாநகர சபை அதிகாரப் பிரதேசங்களில் காணப்படும் ஹோட்டல்களில் குறைந்தபட்ச அறைக் கட்டணங்கள் செயல்படுத்தல்

குறைந்தபட்ச அறைக் கட்டணம் தொடர்பாக வர்த்தமாணி அறிவித்தலுக்கமைய செயற்பாடுகளை மேற்கொள்வது தொடர்பில் உறுதிப்படுத்துவதற்காக கஜ்மா அன்ட் கம்பனி (பட்டயக் கணக்காளர்கள்) மூலம் ஹோட்டல் கணக்காய்விற்குட்படுத்தும் பணிகள் 2017 நவம்பர் 1 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டது. வகைப்படுத்தப்பட்ட எஞ்சிய ஹோட்டல்களை கணக்காய்விற்கு உட்படுத்தும் பணிகள் அமுல்படுத்தப்பட்டுள்ளதுடன் 2017 ஆம் ஆண்டில் கீழ்க் குறிப்பிடப்பட்டவாறு ஏற்கனவே ஹோட்டல்கள் கணக்காய்விற்குட்படுத்தப்பட்டுள்ளன.

- கொழும்பு தாஜ் சமுத்திரா ஹோட்டல்-
- கொழும்பு சினமன் லேக் சைட் ஹோட்டல்
- கொழும்பு ஹில்டன் ஹோட்டல்

### 8.3.6 SLTDA அனுமதியின்று இயங்கும் சுற்றுலா நிறுவனங்களை அங்கீகரிப்பதற்கான வேலைப்பாடு

SLTDA அனுமதியின்று இயங்கும் சுற்றுலா நிறுவனங்கள் மற்றும் சேவை வழங்கும் நிறுவனங்கனை உள்ளீர்ப்பு செய்வதற்காக துரித வேலைத்திட்டங்கள் நடாத்தப்பட்டது, கீழ் குறிப்பிடப்பட்டவாறு அனுமதிப் பத்திரம் வெளியிடப்பட்டது.

சிகிரியா - 11
உணவட்டுன - 14
ஹிக்கடுவ - 08
எல்ல - 57
மிரிஸ்ச - 01
கற்பிட்டி - 04
மொத்தம - 95

### 8.3.7 சுற்றுலா நடமாடும் சேவை

சுற்றுலா சேவை வழங்குனர்களுக்கிடையே அறிவுறுத்தல்களை வழங்குவதற்கான செயற்பாடுகளை போன்று பதிவு செய்வதற்காக செயற்பாட்டு ஒழுங்கு விதிமுறைகள் மற்றும் புதுப்பிக்கும் செயற்பாட்டு ஒழுங்கு விதிமுறைகளை துரிதப்படுத்துவதற்காகவும் சுற்றுலா நடமாடும் சேவை நடாத்தப்பட்டது. இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையுடன் கூட்டிணைந்து சர்வதேச நிதிக் கூட்டுத்தாபனம் (IFC) கீழே குறிப்பிடப்பட்டுள்ளவாறு நடமாடும் சுற்றுலா சேவைக்காக நிதியம் வழங்கப்பட்டது.

- **மன்னார் -** 2017 மார்ச் மாதத்தில் நடாத்தப்பட்டதுடன், 56 சேவை வழங்குனர்கள் பங்கேற்றனர். சுற்றாடல் வசதி வழங்குனர்களுக்காக குறிப்பிடப்பட்ட அடையாள அட்டை பங்கேற்ற 12 பேர்களுக்காக வழங்கப்பட்டன.

இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையினால் கீழ்க் குறிப்பிடப்பட்ட பிரதேசங்களில் முறைசாரா பிரிவின் சுற்றுலா சேவை வழங்குனர்கள் சுற்றுலாத்துறையில் முறையான பிரிவில் உள்ளடக்குவதற்காக நடமாடும் சேவைகள் ஆரம்பிக்கப்பட்டன.

- **கற்பிட்டி -** 2017 ஜனவரி மாதத்தில் நடாத்தப்பட்டதுடன், 132 சுற்றுலா சேவை வழங்குனர்கள் இதில் பங்கேற்றனர்.
- **மிரிஸ்ச -** 2017 ஒக்டோபர் மாதத்தில் நடாத்தப்பட்டதுடன், 83 சுற்றுலா சேவை வழங்குனர்கள் இதில் பங்கேற்றனர்.
- **எல்ல -** 2017 மார்ச் மாதத்தில் நடாத்தப்பட்டதுடன், 57 சுற்றுலா சேவை வழங்குனர்கள் இதில் பங்கேற்றனர்.



## 8.4 சர்வதேச அனுபவங்களை பெற்றுக் கொள்ளல் மற்றும் ஊழியர்களுக்கு அறிவு மேம்படுத்தும் அபிவிருத்தி

### 8.4.1 2017 ஆம் ஆண்டில் சர்வதேச கருத்தரங்குகளில் பங்கேற்றல்

1. ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தின் உலக சுற்றுலா அமைப்பு (UNWTO) மூலம் அபிவிருத்திக்கான நிலையான சுற்றுலா கைத்தொழிலின் சர்வதேச ஆண்டு - 2017 ஸ்பெயின் மெட்றிக் நகரில் 2017 ஜனவரி 18 தொடக்கம் 22 வரை நடாத்தப்பட்டது.
2. சர்வதேச உரையாடல் தொடர்பான 4வது உலக மன்றம் - 2017 மே மாதம் 5 தொடக்கம் 6 வரை அ'ர்பைஜான் தேசத்தில் பாக்கு நகரில் நடாத்தப்பட்டது.
3. உலக சுற்றுலா அமைப்பின் கிழக்காசிய மற்றும் ஆசிய பசுபிக் வலயத்திற்கான ஆணைக்குழு சபை உட்பட உலக சுற்றுலா அமைப்பின் தெற்காசியாவிற்கான ஆணைக்குழு சபைக்கிடையிலான 29 வது கூட்டிணைந்த மாநாடு 2017 மே மாதம் 15 ஆம் திகதி தொடக்கம் 17 ஆம் திகதி வரை பங்களாதேஷ் சித்தகோ நகரில் நடாத்தப்பட்டது.
4. 2017 ஜூன் 2 ஆம் திகதி தாய்லாந்து பெங்கோக் நகரில் நடாத்தப்பட்ட இலங்கை மற்றும் தாய்லாந்து இடையிலான வர்த்தகத்திற்குரியதான விடயங்கள் தொடர்பிலான 2 இடைக்காலக் குழுவின் கூட்டங்களில் பங்கேற்றல்.
5. சுற்றுலாத்துறையின் புள்ளிவிபரம் தொடர்பான 6 வது சர்வதேச கருத்தரங்கு : நிலையான சுற்றுலா கைத்தொழிலின் அளவீடு 2017 ஜூன் 21 ஆம் திகதி தொடக்கம் 24 ஆம் திகதி வரை பிலிப்பைன்ஸ் மனிலா நகரில் நடாத்தப்பட்டது.

### 8.4.2 உலக புலமைச் சொத்து அமைப்பு (WIPO) மற்றும் இலங்கை அரசாங்கம் (GoSL) இற்கிடையிலான ஒத்துழைப்புக்கள்

“புலமைச் சொத்து, சுற்றுலாத்துறையில் மற்றும் கலாசாரம்” என்ற உலக புலமைச் சொத்து அமைப்பின் (WIPO) செயற்திட்டத்திற்காக பங்கேற்பதற்கு தேர்ந்தெடுக்கப்பட்ட நான்கு முன்னோடி நாடுகளில் ஒரு நாடாக இலங்கை பற்கேற்றது.

**இலங்கையில் “புலமைச் சொத்து, சுற்றுலாத்துறையில் மற்றும் கலாசாரம்” என்ற தொனிப் பொருள் கொண்ட செயற்திட்டத்தின் நோக்கங்கள்**

- இலங்கையின் புலமைச் சொத்துக்களின் செயற்பாடுகள் தொடர்பான விளக்கத்தினை விருத்தி செய்ய மற்றும் அச் செயற்திட்டத்தின் மூலம் பங்களிப்பு கிடைப்பதுடன் செயற்திட்டத்தின் ஊடாக நாட்டின் சுற்றுலாத்துறைக்குரிய பொருளாதார செயற்பாட்டுப் பணிகளை முன்னெடுப்பதற்காகவும் பங்களிப்பு கிடைக்கும
- மேலும் 10விடயங்கள் கொண்ட செயற்பாட்டுத் திட்டம் மூலம் தற்போது முன்னெடுக்கப்படும் உலக புலமைச் சொத்து அமைப்பு (WIPO) இலங்கை அரசாங்கத்திற்கான (GoSL) இடையிலான ஒத்துழைப்பின் புதிய துறைகளை விருத்தி செய்வதற்காக புலமைச் சொத்தினைப் பயன்படுத்தும் விடயப் பரப்பினை விருத்தி செய்வதும் இச் செயற்திட்டத்தின் மூலம் இடம் பெறுகின்றன.
- அறிவு விருத்தி மற்றும் அபிவிருத்திக் கொள்கைக் கோட்பாட்டுக்குள் பிரதான தரப்பினர்களின் அறிவு விருத்தி மற்றும் புலமைச் சொத்துக்கள் உட்பட சுற்றுலா கைத்தொழிலுக்கு இடையிலான ஒப்பீடுகள் குறித்து அறிவுறுத்தல்களை விருத்தி செய்வதும் இச் செயற்திட்டத்தின் நோக்கமாக அமைகின்றது.
- ஆவணப்படுத்தப்பட்ட அனுபவங்கள் மற்றும் சிறந்த நெறிமுறைகள் உட்பட செயற்திட்டத்தை அமுல்படுத்தும் காலத்திற்குள் விருத்தி செய்யப்பட்ட வியூங்கள், கருவிகள் மற்றும் பிரயோக வழிகாட்டல் ஆலோசனைகள் மூலம் கொள்கை அடிப்படையில் தீர்மானம் எடுக்கும் போது அதற்காக வழிகாட்டுவதும் மற்றும் தேசிய பொருளாதாரம், சமூகம் உட்பட கலாச்சார பிரதிலாபங்கள் விருத்தி செய்யப்படும் அதேவேளையில் சுற்றுலா கைத்தொழிலை விருத்தி செய்யும் போது Intellectual Property பயன்பாடு தேசிய மற்றும் உள்நாட்டு அறிவு, சம்பிரதாயம் உட்பட கலாசாரம் தொடர்பில் பொதுமக்களின் அறிவினை மேம்படுத்துவதற்கும் இச் செயற்திட்டத்தின் மூலம் பங்களிப்புக்கள் வழங்கப்படுகின்றன.



2017 ஆம் ஆண்டில் நவம்பர் மாதத்தில் வெளியிடப்பட்ட உலக புலமைச் சொத்து அமைப்பின் கற்கை அறிக்கையினை கையளித்தல்



IP rights will boost competitiveness of tourism industry _ WIPO

WIPO Representative Francesca Toso

பெற்ற செயலமர்வில் பங்கேற்றோர் மத்தியில் உரையாற்றுதல்



### 8.4.3 2017 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட உலக சுற்றுலா தின தேசிய நிகழ்வு

இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை இவ்வாண்டில் உலக சுற்றுலா தினத்தை “நிலையான சுற்றுலாத்துறையின் - அபிவிருத்திக்கான கருவி” என்ற தொனிப்பொருளின் கீழ் 2017 செப்ரெம்பர் 27 ஆம் திகதி தொடக்கம் 28 ஆம் திகதி வரை காலை 10.00 மணி தொடக்கம் பி.ப 8.00 மணி வரையான காலப்பகுதிக்குள் கொழும்பு ஆர்கேட் இன்டிபென்டன் ஸ்கெயாரில் நடாத்தப்பட்டது.

நிலையான செயற்பாடு கொண்ட, பொறுப்புக்கூறக் கூடிய, நம்பகத் தன்மையினை அங்கீகாரத்திற்குட்படுத்தி சுற்றுலா கைத்தொழிலை முன்னெடுப்பதற்காக ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தின் உலக சுற்றுலா அமைப்பு (UNWTO) மூலம் உலக சுற்றுலா தினம் பிரகடனப்படுத்தப்பட்டது.

சுற்றுலாத்துறையின் முக்கியத்துவம் மற்றும் சமூக, கலாசார, அரசியல் மற்றும் பொருளாதார பெறுமதிகள் தொடர்பில் சர்வதேச சமூகத்தை அறிவுறுத்துவதற்காக சகல ஆண்டுகளிலும் செப்ரெம்பர் 27 ஆம் திகதி உலகம் பூராகவும் மக்கள் உலக சுற்றுலா தினத்தை அனுஷ்டிகின்றனர்.

சுற்றுலாத்துறையின் மூலமான செயற்பாடுகளை முன்னெடுக்கும் பொருளாதாரம் கொண்ட நாடுகள் மற்றும் வலய நிலையானதல்லாத சுற்றுலா வர்த்தகம் சார்ந்ததாக சூழலை போன்று சமூக காலச்சார பிரச்சினைகள் தொடர்பாகவும் உயரிய கவனம் செலுத்தப்படுகின்றது. இதன் பயனாக சுற்றுலா கைத்தொழிலின் சுற்றாடல் அழுத்தங்களைக் கட்டுப்படுத்துவதை போன்று சுற்றுலா கேந்திர நிலையங்களில் சமூக பொருளாதார மற்றும் முழுமையான பிரதிலாபங்களை உயர்ந்த மட்டத்தில் பெற்றுக் கொள்வதற்காக நிலையான சுற்றுலா கைத்தொழிலை அபிவிருத்தி செய்வதற்கான பணிகளை ஊகிக்கும் தேவை தொடர்பில் உயரிய மட்டத்திலான இணக்கங்கள் எட்டப்பட்டு வருகின்றன.

இந் நோக்கங்களை எட்டுவதற்கான எதிர்பார்ப்புடன் இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை (SLTDA) உலக சுற்றுலா தினத்தை அனுஷ்டிப்பதற்காக கீழ்க் குறிப்பிட்டப்பட்ட செயற்பாடுகளை ஒழுங்கு செய்தமை குறிப்பிடத்தக்கது. .

- நிலையான சுற்றுலா வர்த்தகம் தொடர்பான கண்காட்சியினை நடாத்துதல் : அரச அமைப்புக்கள், மாநகர சபை மற்றும் சுற்றுலா கைத்தொழிலில் ஈடுபட்டுள்ள முன்னணி ஹோட்டல்கள் மற்றும் பிரதான சங்கங்களை ஒருங்கிணைத்து இக் கண்காட்சி நடாத்தப்பட்டது.
- “அன்புமிக்க இலங்கை” என்ற தொலைக்காட்சி நிகழ்ச்சியினை அடிப்படையாகக் கொண்டு புகைப்படக் கண்காட்சி நடாத்தப்பட்டது.
- மேற்கு, தெற்கு, மத்திய மாகாணங்களில் அமைந்துள்ள மிகவும் பிரபல்யத்துக்குட்படாத சுற்றுலா பிரயாணிகளுக்காக கவர்ச்சிமிக்க இடங்கள் தொடர்பில் எழுதப்பட்ட 3 நூல்களை வெளியிடல்.
- இத் தொனிப்பொருள் தொடர்பாக நாடுபூராகவும் அமைந்துள்ள பாடசாலைகளுக்கிடையே கட்டுரை போட்டி நடாத்தப்பட்டது.
- “அன்புமிக்க இலங்கை” என்ற புகைப்படக் கண்காட்சி மற்றும் கட்டுரைப் போட்டியில் வெற்றியீட்டியோருக்காக சான்றிதழ் உட்பட விருது வழங்கும் வைபவத்தை நடாத்துதல்.
- கொழும்பு மாவட்டத்தில் அமைந்துள்ள சுற்றுலாவிற்குப் பொருத்தமான உணவகங்களுக்காக சான்றிதழ்களை வழங்குதல்.









## 8.5 உள்நாட்டு சுற்றுலா மற்றும் சமூக இணைப்புக்கள் (DT & CR)

இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையின் (SLTDA) உள்நாட்டு சுற்றுலா வர்த்தகம் மற்றும் சமூக இணைப்பு (DT & CR) பிரிவு 2015 ஜூலை மாதம் தொடக்கம் செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டன. சுற்றுலாப் பிரயாணிகளுக்காக கவர்ச்சிமிக்க இடங்களின் உட்கட்டமைப்பு வசதிகளை விருத்தி செய்தல் மற்றும் சுற்றுலாத்துறைக்குரியதான சமூகத்தை அடிப்படையாகக் கொண்ட செயற்பாடுகளில் ஈடுபடுவதும் பிரதான நோக்கமாக மாற்றம் பெற்றுள்ளது.

உள்நாட்டு சுற்றுலா வர்த்தகம் மற்றும் சமூக இணைப்புப் பிரிவு (DT & CR) அரசாங்கத்தின் சுற்றுலா கைத்தொழில் கொள்கைகளுக்கு அமைவாக, மாகாண சுற்றுலா அமைச்சுடன் இணைந்து உட்கட்டமைப்பு வசதிகளை விருத்தி செய்யும் செயற்திட்டங்களில் ஈடுபட்டது.

கீழ்க் குறிப்பிடப்பட்ட செயற்திட்டங்கள் மற்றும் வேலைத்திட்டங்கள் 2017 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டன.

### 8.5.1 தேசிய செயற்திட்டங்கள்

| செயற்திட்டங்கள் | ஒதுக்கப்பட்ட நிதி ரூபா.மில் | 2017.12.31 ஆம் திகதியன்று கொடுப்பனவு ரூபா. மில் | விசேட விடயங்கள |
|---|---|---|---|
| அன்புமிக்க இலங்கை செயற்திட்டம் | 25 | 15 | 100% தினால் பூர்த்தி செய்யப்பட்டுள்ளது. |
| நிலையான இலங்கை தேசிய செயற்திட்டம் | 0.5 | 0.5 | 100% தினால் பூர்த்தி செய்யப்பட்டுள்ளது. |
| ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தின் வெசாக் மாநாடு | | 0.5 | 100% தினால் பூர்த்தி செய்யப்பட்டுள்ளது. |

| பாசிக்குடா - 04 உயிர்காப்பு பிரிவுகளை வடிவமைத்தல் மற்றும் தாபித்தல் | 10,857,604 | 2,737,748 |
| அனுராதபுரம் | 26,712,370 | 200,000 |
| சுலங்கா பென்தொட்ட | 3,860,147 | 250,000 |
| பென்தொட்ட - விடுதி நிர்மானிப்பு | 125,494 | |
| சுற்றுலா பொலிஸ் தகவல் மத்திய நிலையம் | - | 2,553,668 |
| பென்தொட்ட - நிலத்திற்கு கீழ் கொங்கிரிட் இடல் | - | 2,376,805 |
| மின்மாற்றி மத்திய நிலையத்தை நிர்மானித்தல் - கதிர்காமம் | 304,762 | 304,762 |
| கலிடோ கரையோர அபிவிருத்தி செயற்திட்டம் | 1,247,206 | 1,247,206 |
| டேபள்டச் ஸ்கிறீனைப் பொருத்துதல் | - | 784,642 |
| தலைமை அலுவலகக் கட்டடப் புனரமைப்பு | 23,383,398 | 361,000 |
| உள்நாட்டு சுற்றுலாச் செயற்திட்டம் | | |
| சததென்ன விவசாயப் பண்ணை | 11,672,963 | 8,543,316 |
| வசதிகள் வழங்கும் மத்திய நிலைய நிர்மானிப்பு அக்குறுகொட - திஸ்சமகராம | 8,766,500 | 3,506,600 |
| கற்பிட்டி அபிவிருத்திச் செயற்திட்டம் | 26,097,903 | 98,865,474 |
| ருவன எல்ல அபிவிருத்திச் செயற்திட்டம் | 47,893 | |
| துன்கிந்த எல்ல - அபிவிருத்திச் செயற்திட்டம் | 1,497,627 | |
| தலைமன்னார் மாதிரிக் கரையோரம் | 2,632,395 | |
| மதுரங்குளி - வசதிகளை வழங்கும் மண்டப அபிவிருத்திச் செயற்திட்டம் | 3,771,807 | |
| **மொத்தம்** | **340,100,479** | **315,476,031** |

## 09 நீண்ட கால முதலீடுகள்

| | 2017 (ரூபா.) | 2016 (ரூபா.) |
|---|---|---|
| தேய்மானம் முதலீடு – சுற்றுலா பணியகம் | 976,509 | 976,509 |
| தேய்மானம் முதலீடு – சுற்றுலா சபை | 52,154,738 | 52,154,738 |
| புலமைச் சொத்து நிதிய முதலீடு | 759,021 | 759,021 |
| இலங்கை சுற்றுலா ஹோட்டல் (தனியார்) கம்பனி | 750,000 | 750,000 |
| எக்ஸ்சோட்டிக்காக விடுதி தனியார் நிறுவனம் ரூபா 10 பங்குகள் | 4,000,000 | 4,000,000 |
| பணிக்கொடைக்கான ஒதுக்கீடு | 21,472,970 | 20,632,396 |
| **மொத்தம்** | **80,113,238** | **79,272,664** |

## 10 கடன்படுனர்

| | 2017 (ரூபா.) | 2016 (ரூபா.) |
|---|---|---|
| பல்வகைக் கடன்படுனர் | 184,240 | 193,181 |
| இலங்கை சுற்றுலா ஊக்குவிப்பு பணியகம் | 47,906 | 62,906 |
| இலங்கை சுற்றுலா ஹோட்டல் மற்றும் முகாமைத்துவ நிறுவகம் | 6,512,810 | 6,512,810 |
| இலங்கை இணக்கப்பாட்டு பணியகம் | 103,045 | 103,046 |
| பணிக்கொடை கொடுப்பனவு | 67,102 | 67,102 |
| சுற்றுலா அபிவிருத்தி நிதியக் கணக்கு (கொடுப்பனவு) | - | 62,844 |
| கற்பிட்டி செயற்திட்ட கொடுப்பனவு | - | 106,191 |
| காணிக் குத்தகைக் கொடுப்பனவு | 6,199,603 | - |
| கழிவுநீர் அகற்றல் கொடுப்பனவு | 141,938,902 | - |
| கொடுப்பனவு மாற்றங்கள் | | 86,305,593 |
| வைப்பு / ஏனைய கொடுப்பனவு | 35,939,522 | 40,895,614 |
| மொத்தம் | **190,993,130** | **134,309,287** |

## 11.01 குத்தகைக் கடன்படுனர் - குறுகிய காலம்

| | 2017 (ரூபா.) | 2016 (ரூபா.) |
|---|---|---|
| நீண்ட கால வாகனக் குத்தகை தவணைக் கட்டணம் | 1,743,917 | 9,434,868 |
| தள்ளுபடி செய்யப்பட்ட வட்டித் தொகைக்கான கட்டணம் | (94,614) | (866,338) |
| **மொத்தம்** | **1,649,303** | **8,568,530** |

## 11.02 குத்தகைக் கடன்படுனர் - நீண்ட காலம்

| | 2017 (ரூபா.) | 2016 (ரூபா.) |
|---|---|---|
| நீண்ட கால வாகனக் குத்தகை தவணைக் கட்டணம் | - | 11,084,171 |
| தள்ளுபடி செய்யப்பட்ட வட்டித் தொகைக்கான கட்டணம் | - | (866,338) |
| | - | (8,568,530) |
| **மொத்தம்** | **-** | **1,649,303** |

## 12. ஓய்வுதிய பணிக்கொடைக்கான ஒதுக்கீடு

| | 2017 (ரூபா.) | 2016 (ரூபா.) |
|---|---|---|
| செலுத்த வேண்டிய பணிக்கொடை முன்கொண்டு சென்றது | 54,204,721 | 52,288,318 |
| கழி : 2017 ம் ஆண்டு பணிக்கொடை கொடுப்பனவு | 6,266,210 | 2,795,731 |
| உப மொத்தம் | 47,938,512 | 49,492,587 |
| கூட்டு : பணிக்கொடைக்கான ஒதுக்கீடு 2017 | 4,084,528 | 4,712,134 |
| **2017.12.31 ஆம் திகதியன்று செலுத்த வேண்டிய பணிக்கொடை மொத்தம்** | **52,023,039** | **54,204,721** |

குறைந்தபட்ச சேவைக்காலத்தை பூர்த்தி செய்வதற்கு முன்னர் பணிக்கொடை ஒதுக்கீட்டு கணக்கு மேற்கொள்ளப்படும் (குறைந்தபட்சம் 5 வருடங்கள்)

## 13. புறப்படுகை வரி

| | 2017 (ரூபா.) | 2016 (ரூபா.) |
|---|---|---|
| ஆண்டுக்கான புறப்படுகை வரி | 333,035,950 | 329,761,779 |
| **மொத்தம்** | **333,035,950** | **329,761,779** |

## 14. சுற்றுலா அபிவிருத்தி வரி

| | 2017 (ரூபா.) | 2016 (ரூபா.) |
|---|---|---|
| ஆண்டுக்கான சுற்றுலா அபிவிருத்தி வரி | 211,424,320 | 179,476,385 |
| கூட்டு : ஆண்டின் ஒதுக்கீடு (மதிப்பீடுகளுக்கமைய மாற்றங்கள்) | 5,176,909 | - |
| **மொத்தம்** | **216,601,229** | **179,476,385** |



## 15. கட்டணம் மற்றும் அனுமதிப்பத்திரம்

| | 2017 (ரூபா.) | 2016 (ரூபா.) |
|---|---|---|
| காணி குத்தகை வருமானம் - பிரதான அலுவலகம் | 56,596,596 | 41,445,274 |
| அனுமதிப்பத்திரக் கட்டணம் / நிர்வாக கட்டணம் - வீசாக் கட்டணம் | 112,524,030 | 68,064,450 |
| தேசிய சுற்றுலா முதலீட்டுப் பிரிவு | 10,263,793 | 7,469,273 |
| சுற்றுலா அபிவிருத்தி நிதியத்தின் நிர்வாகக் கட்டணம் | 7,539,949 | 6,442,081 |
| **மொத்தம்** | **186,924,368** | **123,421,078** |

## 16. மிகை / (குறைவு) – உள்நாட்டு சுற்றுலா மற்றும் விடுதிச் செயற்பாடு

| | 2017 (ரூபா.) | 2016 (ரூபா.) |
|---|---|---|
| கதிர்காமம் | (3,892,994) | (2,671,177) |
| நுவரெலியா | (2,862,849) | (2,554,366) |
| பண்டாரவெல | (850,433) | (2,188,086) |
| அநுராதபுரம் | (5,421,470) | (3,126,060) |
| பென்தொட்ட | 21,409,314 | 21,944,985 |
| பொலன்னறுவை / கிரித்தலை | 3,547,544 | 3,003,045 |
| கல்குடா | (15,320,870) | (18,308,620) |
| **மிகை / (குறைவு) – உள்நாட்டு சுற்றுலா மற்றும் விடுதி செயற்பாடு** | **(3,391,757)** | **(3,900,279)** |

## 17. ஏனைய வருமானம்

| | 2017 (ரூபா.) | 2016 (ரூபா.) |
|---|---|---|
| வட்டி வருமானம் - ஊழியர் கடன் | 584,499 | 571,126 |
| வங்கி வட்டி | 862,127 | 886,108 |
| வங்கி வட்டி - நிதி முகாமைத்துவக் கணக்கு | 43,561,621 | 32,654,342 |
| பிரதிலாப சொத்துக்களை வெளியேற்றல் | 4,301,578 | 4,805,362 |
| ஏனைய வருமானம் | 5,177,503 | 1,745,742 |
| குறைந்த செல்லும் பெறுமதி மிதான திரண்ட செலவினம் | 10,550,023 | 8,325,722 |
| பங்கிலாபம் | 400,000 | 180,000 |
| பரிமாற்றல் பெறுகை | - | 9,724 |
| **மொத்தம்** | **65,437,350** | **49,178,126** |

## 18. சம்பளம் கொடுப்பனவு மற்றும் பிரதிலாபங்கள்

| | 2017 (ரூபா.) | 2016 (ரூபா.) |
|---|---|---|
| சம்பளம் மற்றும் கொடுப்பனவு | 73,832,271 | 67,552,713 |
| விடுமுறை தின மற்றும் எனைய கொடுப்பனவு | 329,190 | 475,093 |
| மேலதிக நேரம் | 2,587,316 | 2,860,631 |
| ஊழியர் சேமலாப நிதியத்திற்கான சபை பங்களிப்பு | 76,916,805 | 7,095,037 |
| ஊழியர் பொறுப்பு நிதயத்திற்கான சபை பங்களிப்பு | 9,965,843 | 1,412,914 |
| ஊழியர் நலன்புரி | 25,023,097 | 17,703,699 |
| ஊழியர் சீருடை | 385,095 | 301,014 |
| பிரயாண செலவினம் - உள்நாடு | 781,967 | 515,314 |

| | | |
|---|---|---|
| பணிக்கொடை | 4,019,114 | 4,844,049 |
| சமூகமளிப்பு ஊக்குவிப்பு | 3,164,935 | 2,633,699 |
| **மொத்தம்** | **197,005,633** | **105,394,162** |

## 19. விநியோகம் மற்றும் பயன்பாட்டுப் பொருட்கள்

| | 2017 (ரூபா.) | 2016 (ரூபா.) |
|---|---|---|
| உபசரணை உள்நாடு | 855,493 | 1,678,740 |
| பல்வகை வழங்கல் | 1,601,193 | 1,736,103 |
| சுத்திகரிப்பு விநியோகம் | 12,876 | |
| பாதுகாப்புக் கட்டணம் | 4,812,703 | 3,858,070 |
| சுத்திகரிப்புக் கட்டணம் | 7,519,153 | 4,449,547 |
| காகிதாதிகள் | 4,794,242 | 3,844,893 |
| தொலைபேசி | 13,048,014 | 7,391,727 |
| தபால் மற்றும் முத்திரை வரி | 2,999,136 | 3,211,009 |
| மின்சாரம் | 8,300,651 | 9,380,687 |
| கட்டணம் மற்றும் அனுமதிப்பத்திரம் | 1,042,545 | 1,054,820 |
| காப்புறுதி – நிலையான சொத்து | 1,494,090 | 1,489,468 |
| கட்டிடப் பராமரிப்பு | 5,559,919 | 1,097,622 |
| உபகரணப் பராமரிப்பு | 3,664,603 | 4,416,584 |
| பொதுவான விளம்பரம் | 4,624,067 | 3,579,760 |
| சட்ட செலவினம் | 1,094,876 | 505,819 |
| வாகன வடகை | 13,322,659 | 2,452,888 |
| வாகன பராமரிப்பு மற்றும் பழுதுபார்த்தல் | 7,544,311 | 7,743,701 |
| நீர் | 1,252,186 | 972,303 |
| ஐயக்கடன் மற்றும் அறவிடமுடியாக் கடன் ஒதுக்கீடு | 49,308 | 1,279,718 |
| **மொத்தம்** | **83,592,027** | **60,143,458** |

## 20. வர்த்தகத்துடன் இணைந்த செலவினம்

| | 2017 (ரூபா.) | 2016 (ரூபா.) |
|---|---|---|
| புள்ளி விபரவியல் ஆய்வு | 937,938 | 1,307,420 |
| ஹோட்டல் வகைப்படுத்தல் | 5,879,381 | 5,047,293 |
| பிரயாண செலவினம் - வெளிநாடு | 8,288,681 | 3,773,006 |
| அச்சு மற்றும் பிரச்சாரம் | 2,420,709 | 1,000,655 |
| சம்மேளனம் மற்றும் விசேட செயற்பாடுகள் | 12,047,781 | 38,267,286 |
| துணை சர்வதேச அமைப்பு | 9,165,416 | 8,265,645 |
| சமூக இணைப்புக்கள் | 7,576,233 | 1,757,244 |
| தேசிய சுற்றுலா முதலீட்டுப் பிரிவு | 1,673,741 | 1,032,099 |
| ஊழியர் பயிற்சி மற்றும் ஆலோசனை சேவை | 2,276,633 | 2,575,328 |
| புத்தகம் மற்றும் சஞ்சிகை | 296,970 | 278,480 |
| தகவல் தொழில்நுட்பப் பராமரிப்பு | 16,829,336 | 9,239,875 |
| கற்பிட்டி செலவினம் | 1,217,072 | 1,171,908 |
| யால வன விடுதி செயற்திட்டச் செலவினம் | 445,648 | 235,354 |
| குச்சவெளி செயற்திட்ட செலவினம் | 132,739 | - |
| புத்தாக்க அபிவிருத்திச் செயற்திட்டம் | 171,871 | 866,301 |
| அபிவிருத்திச் செயற்திட்டம் - தேசிய விடுமுறை விடுதி | 128,792 | 42,235 |
| சுற்றுலா வலய அபிவிருத்திச் செலவினம் | 6,000,001 | |
| ஊக்குவிப்பு மற்றும் விளம்பரம் | 13,714,178 | 11,308,588 |
| **மொத்தம்** | **89,203,117** | **86,168,720** |

## 21. ஏனைய செலவினங்கள்

| | 2017 (ரூபா.) | 2016 (ரூபா.) |
|---|---|---|
| பணிப்பாளர் சபைக் கொடுப்பனவு | 962,969 | 620,000 |
| கணக்காய்வுக் கட்டணம் | 578,738 | 806,785 |
| பரிமாற்றல் பெறுகை / நட்டம் | 2,226 | - |
| **மொத்தம்** | **1,543,932** | **1,426,785** |

## 22. நிதிச் செலவினம்

| | 2017 (ரூபா.) | 2016 (ரூபா.) |
|---|---|---|
| நிதிச் செலவினம் | 771,724 | 2,639,989 |
| வங்கிக் கட்டணம் | 164,171 | 137,561 |
| **மொத்தம்** | **935,895** | **2,777,550** |

**விடுதி செயற்பாட்டுச் சுருக்கம்**

**2017 டிசம்பர் 31ம் திகதியன்று முடிவடைந்த கால எல்லைக்காக**

| | 2017<br>ரூபா. | 2016<br>ரூபா. |
|---|---|---|
| **உள்நாட்டுச் சுற்றுலா - தேசிய விடுமுறை விடுதி** | | |
| கதிர்காமம் | (3,892,994) | (2,671,177) |
| நுவரெலியா | (2,862,849) | (2,554,366) |
| பண்டாரவெல | (850,433) | (2,188,086) |
| அநுராதபுரம் | (5,421,470) | (3,126,060) |
| உப மொத்தம் | **(13,027,746)** | **(10,539,689)** |
| **தேசிய விடுமுறை விடுதி - சேவை மற்றும் குத்தகை - வருமானம் ஈட்டல்** | | |
| பென்தொட்ட | 21,409,314 | 21,944,985 |
| பொலன்னறுவை / கிரித்தலை | 3,547,544 | 3,003,045 |
| கல்குடா | (15,320,870) | (18,308,620) |
| **உப மொத்தம்** | **9,635,988** | **6,639,409** |
| மிகை / (குறைவு) | **(3,391,757)** | **(3,900,279)** |

**தேசிய விடுமுறை விடுதி - கதிர்காமம்**

வருமான வெளிப்பாடுகள்

2017 டிசம்பர் 31 முடிவடைந்த கால எல்லைக்காக

| | குறிப்பு | 2017<br>ரூபா. | 2016<br>ரூபா. |
|---|---|---|---|
| உணவக விற்பனை | | 8,174,869 | 9,572,624 |
| கழி – விற்பனை செலவினம் | | 4,233,598 | 4,957,953 |
| **தேறிய வருமானம்** | | **3,941,271** | **4,614,672** |
| அறை விற்பனை | | 12,658,060 | 13,875,017 |
| ஏனைய வருமானம் | | 313 | 520 |
| **தேறிய இலாபம்** | | **16,599,644** | **17,338,641** |
| கழி – நிருவாக மற்றும் நிறுவன செலவினம் | | 16,072,338 | 17,338,641 |
| தேய்மானம் | | 4,420,300 | 3,822,744 |
| **மிகை / (குறைவு)** | | **(3,892,994)** | **(2,671,177)** |
| **நிருவாக மற்றும் நிறுவன செலவினம்** | | **6,948,898** | **7,298,494** |
| சம்பளம் மற்றும் கொடுப்பனவு | | 6,948,898 | 7,298,494 |
| மேலதிக நேரம் | | 320,518 | 398,228 |
| ஊழியர் சேமலாப நிதியத்திற்கான சபையின் பங்களிப்பு | | 941,055 | 770,751 |
| ஊழியர் பொறுப்பு நிதியத்திற்கான சபையின் பங்களிப்பு | | 188,211 | 154,150 |
| ஊழியர் நலன் புரி / உபசரனை செலவினம் - உள்நாடு | | 428,271 | 461,136 |
| ஊழியர் உணவு | | 564,096 | 579,911 |
| ஊழியர் சீருடை | | 170,936 | 168,540 |
| சுத்திகரிப்பிற்கான விநியோகம் | | 284,074 | 103,741 |
| பல்வகை மிகை | | 49,798 | 144,588 |
| பாதுகாப்பு வழங்கல் | | 900,237 | 1,386,030 |
| சுத்திகரிப்பு கட்டணம் | | 1,232,739 | 1,689,168 |
| தொலைபேசி | | 176,699 | 134,340 |
| காகிதாதிகள் | | 107,310 | 102,834 |
| அச்சு மற்றும் வெளியீடு | | 60,890 | 56,855 |
| மின்சாரம் | | 1,118,967 | 1,372,046 |
| கட்டணம் மற்றும் அனுமதிப்பத்திரம் | | 67,032 | 23,728 |
| காப்புறுதி நிலையான சொத்து | | 4,990 | 2,789 |
| லொன்றி | | 372,457 | 516,308 |
| கட்டிடப் பராமரிப்பு | | 414,153 | 107,659 |
| உபகரணப் பராமரிப்பு | | 112,142 | 115,036 |
| போக்குவரத்து மற்றும் சரக்குப் பொருள் | | 52,000 | - |
| வங்கிக் கட்டணம் | | 6,950 | 2,000 |
| வாகன பராமரிப்பு மற்றும் பழுதுபார்த்தல் | | 58,365 | 51,780 |
| புத்தகம் மற்றும் சஞ்சிகை | | 11,031 | 13,618 |
| சமூகமளிப்பு ஊக்குவிப்பு | | 346,290 | 467,059 |
| பொருளாதார சேவை | | - | - |
| நீர் | | 1,134,230 | 1,217,851 |
| **மொத்தம்** | | **16,072,338** | **17,338,641** |



**தேசிய விடுமுறை விடுதி - நுவரெலியா**

**வருமான வெளிப்பாடுகள்**

**2017 டிசம்பர் 31 முடிவடைந்த கால எல்லைக்காக**

| | குறிப்பு | 2017<br>ரூபா. | 2016<br>ரூபா. |
|---|---|---|---|
| உணவக விற்பனை | | 6,654,422 | 7,504,180 |
| கழி – விற்பனை செலவினம் | | 2,898,136 | 3,086,119 |
| **தேறிய வருமானம்** | | **3,756,286** | **4,418,061** |
| அறை விற்பனை | | 10,091,759 | 9,415,629 |
| ஏனைய வருமானம் | | 386,924 | 241,711 |
| **உப மொத்தம்** | | **10,478,683** | **9,657,341** |
| **தேறிய இலாபம்** | | **14,234,968** | **14,075,401** |
| கழி – நிருவாக மற்றும் நிறுவன செலவினம் | | 14,265,352 | 14,651,472 |
| தேய்மானம் | | 2,832,465 | 1,978,295 |
| **மிகை / (குறைவு)** | | **(2,862,849)** | **(2,554,366)** |
| **நிருவாக மற்றும் நிறுவன செலவினம்** | | | |
| சம்பளம் மற்றும் கொடுப்பனவு | | 6,151,163 | 6,225,169 |
| மேலதிக நேரம் | | 234,551 | 359,807 |
| ஊழியர் சேமலாப நிதியத்திற்கான சபையின் பங்களிப்பு | | 864,204 | 658,075 |
| ஊழியர் பொறுப்பு நிதியத்திற்கான சபையின் பங்களிப்பு | | 172,841 | 131,615 |
| ஊழியர் நலன் புரி | | 471,640 | 428,377 |
| உள்நாட்டு பயணம் | | 2,000 | |
| உள்நாட்டு பொழுதுபோக்கு | | - | 17,806 |
| ஊழியர் உணவு | | 293,142 | 224,793 |
| ஊழியர் சீருடை | | 120,766 | 112,380 |
| சுத்திகரிப்பிற்கான விநியோகம் | | 298,049 | 149,512 |
| பல்வகை மிகை | | 324,420 | 237,452 |
| பாதுகாப்பு வழங்கல் | | 907,154 | 1,225,101 |
| சுத்திகரிப்பு கட்டணம் | | 1,171,125 | 1,830,535 |
| காகிதாதிகள் | | 63,147 | 70,246 |
| தொலைபேசி | | 202,229 | 184,186 |
| அச்சு மற்றும் வெளியீடு | | 59,245 | 56,189 |
| மின்சாரம் | | 1,735,250 | 1,797,890 |
| கட்டணம் மற்றும் அனுமதிப்பத்திரம் | | 79,098 | 88,549 |
| காப்புறுதி நிலையான சொத்து | | 15,542 | 8,685 |
| லொன்றி | | 268,881 | 227,468 |
| கட்டிடப் பராமரிப்பு | | 182,546 | 74,794 |
| உபகரணப் பராமரிப்பு | | 67,973 | 50,260 |
| போக்குவரத்து மற்றும் சரக்குப் பொருள் | | 7,130 | 44,850 |
| வங்கிக் கட்டணம் | | - | 10,060 |
| வாகன பராமரிப்பு மற்றும் பழுதுபார்த்தல் | | 54,463 | 16,629 |
| புத்தகம் மற்றும் சஞ்சிகை | | 16,370 | 12,160 |
| சமூகமளிப்பு ஊக்குவிப்பு | | 318,244 | 268,349 |
| நீர் | | 184,179 | 140,537 |
| **மொத்தம்** | | **14,265,352** | **14,651,472** |

**தேசிய விடுமுறை விடுதி - பண்டாரவெல**
**வருமான வெளிப்பாடுகள்**
**2017 டிசம்பர் 31 முடிவடைந்த கால எல்லைக்காக**

| | குறிப்பு | 2017 ரூபா. | 2016 ரூபா. |
|---|---|---|---|
| உணவக விற்பனை | | 10,188,838 | 9,139,450 |
| கழி – விற்பனை செலவினம் | | 3,763,881 | 3,781,521 |
| **தேறிய வருமானம்** | | **6,424,957** | **5,357,929** |
| அறை விற்பனை | | 9,314,328 | 9,043,813 |
| ஏனைய வருமானம் | | 498,750 | 382,752 |
| **உப மொத்தம்** | | **9,813,078** | **9,426,565** |
| **தேறிய இலாபம்** | | **16,238,035** | **14,784,494** |
| கழி – நிருவாக மற்றும் நிறுவன செலவினம் | | 13,723,368 | 13,946,223 |
| தேய்மானம் | | 3,365,099 | 3,026,357 |
| **மிகை / (குறைவு)** | | **(850,433)** | **(2,188,086)** |

**நிருவாக மற்றும் நிறுவன செலவினம்**

| | 2017 | 2016 |
|---|---|---|
| சம்பளம் மற்றும் கொடுப்பணவு | 6,188,951 | 6,073,827 |
| மேலதிக நேரம் | 280,094 | 292,926 |
| ஊழியர் சேமலாப நிதியத்திற்கான சபையின் பங்களிப்பு | 838,983 | 628,864 |
| ஊழியர் பொறுப்பு நிதியத்திற்கான சபையின் பங்களிப்பு | 165,324 | 125,773 |
| உள்நாட்டு பொழுதுபோக்கு | 1,216 | 637,326 |
| ஊழியர் நலன் புரி | 403,731 | |
| உள்நபட்ட பயணம் | 2,000 | - |
| ஊழியர் உணவு | 535,975 | 501,778 |
| ஊழியர் சீருடை | 130,301 | 139,648 |
| சுத்திகரிப்பிற்கான விநியோகம் | 139,374 | 89,704 |
| பல்வகை மிகை | 266,867 | 118,321 |
| பாதுகாப்பு வழங்கல் | 900,237 | 1,266,133 |
| சுத்திகரிப்பு கட்டணம் | 1,196,203 | 1,790,032 |
| காகிதாதிகள் | 31,893 | 28,591 |
| தொலைபேசி | 133,274 | 91,929 |
| அச்சு மற்றும் வெளியீடு | 58,275 | 47,840 |
| மின்சாரம் | 1,220,256 | 1,327,988 |
| கட்டணம் மற்றும் அனுமதிப்பத்திரம் | 22,281 | 17,281 |
| காப்புறுதி நிலையான சொத்து | 4,046 | 4,379 |
| லொன்றி | 278,094 | 249,365 |
| கட்டிடப் பராமரிப்பு | 312,057 | 108,170 |
| உபகரணப் பராமரிப்பு | 134,122 | 11,780 |
| போக்குவரத்து மற்றும் சரக்குப் பொருள் | 900 | 16,330 |
| வங்கிக் கட்டணம் | 4,085 | 16,000 |
| வாகன பராமரிப்பு மற்றும் பழுதுபார்த்தல் | 79,026 | 48,345 |
| புத்தகம் மற்றும் சஞ்சிகை | 13,220 | 12,480 |
| சமூகமளிப்பு ஊக்குவிப்பு | 246,164 | 293,968 |
| நீர் | 136,420 | 7,447 |
| **மொத்தம்** | **13,723,368** | **13,946,223** |



**தேசிய விடுமுறை விடுதி - அநுராதபுரம்**
**வருமான வெளிப்பாடுகள்**
**2017 டிசம்பர் 31 முடிவடைந்த கால எல்லைக்காக**

| | குறிப்பு | 2017 ரூபா. | 2016 ரூபா. |
|---|---|---|---|
| உணவக விற்பனை | | 4,784,569 | 3,698,440 |
| கழி – விற்பனை செலவினம் | | 2,263,149 | 1,874,598 |
| **தேறிய வருமானம்** | | **2,521,421** | **1,823,842** |
| அறை விற்பனை | | 5,687,700 | 4,632,925 |
| ஏனைய வருமானம் | | 37,949 | 0 |
| **உப மொத்தம்** | | **5,725,648** | **4,632,925** |
| **தேறிய இலாபம்** | | **8,247,069** | **6,456,767** |
| கழி – நிருவாக மற்றும் நிறுவன செலவினம் | | 11,587,684 | 8,033,399 |
| தேய்மானம் | | 2,080,855 | 1,549,428 |
| மிகை / (குறைவு) | | **(5,421,470)** | **(3,126,060)** |

**நிருவாக மற்றும் நிறுவன செலவினம்**

| | 2017 | 2016 |
|---|---|---|
| சம்பளம் மற்றும் கொடுப்பணவு | 5,125,144 | 3,018,549 |
| மேலதிக நேரம் | 176,573 | 108,918 |
| ஊழியர் சேமலாப நிதியத்திற்கான சபையின் பங்களிப்பு | 710,182 | 316,695 |
| ஊழியர் பொறுப்பு நிதியத்திற்கான சபையின் பங்களிப்பு | 142,036 | 63,339 |
| ஊழியர் உணவு | 197,015 | 393,459 |
| ஊழியர் நலன்புரி / உபசரனை செலவினம் - உள்நாடு | 317,660 | - |
| உள்நாட்டு பயணம் | 20,000 | 1,056 |
| உள்நாட்டு பொழுது போக்கு | 550 | - |
| ஊழியர் சீருடை | 89,691 | 59,805 |
| சுத்திகரிப்பிற்கான விநியோகம் | 110,236 | 73,582 |
| பல்வகை மிகை | 267,242 | 88,833 |
| பாதுகாப்பு வழங்கல் | 1,041,048 | 1,081,008 |
| சுத்திகரிப்பு கட்டணம் | 1,241,141 | 1,239,607 |
| காகிதாதிகள் | 88,274 | 35,641 |
| தொலைபேசி | 214,027 | 171,102 |
| அச்சு மற்றும் வெளியீடு | 57,310 | 46,685 |
| மின்சாரம் | 815,349 | 671,857 |
| கட்டணம் மற்றும் அனுமதிப்பத்திரம் | 84,423 | 100,194 |
| காப்புறுதி நிலையான சொத்து | 6,823 | 10,155 |
| லொன்றி | 137,228 | 119,696 |
| கட்டிடப் பராமரிப்பு | 178,139 | 55,991 |
| உபகரணப் பராமரிப்பு | 84,703 | 51,007 |
| போக்குவரத்து மற்றும் சரக்குப் பொருள் | 9,150 | 6,210 |
| வங்கிக் கட்டணம் | 9,500 | 3,625 |
| வாகன பராமரிப்பு மற்றும் பழுதுபார்த்தல் | 47,918 | 81,390 |
| புத்தகம் மற்றும் சஞ்சிகை | 19,770 | 15,851 |
| சமூகமளிப்பு ஊக்குவிப்பு | 304,178 | 154,315 |
| நீர் | 92,375 | 64,831 |
| **மொத்தம்** | **11,587,684** | **8,033,399** |

### தேசிய விடுமுறை விடுதி - பென்தொட்ட
### வருமான வெளிப்பாடுகள்
### 2017 டிசம்பர் 31 முடிவடைந்த கால எல்லைக்காக

| | குறிப்பு | 2017 ரூபா. | 2016 ரூபா. |
|---|---|---|---|
| அறை விற்பனை | | 10,000 | - |
| வாடகை வருமானம் (காணி கட்டட நீண்டகால குத்தகை) | | 36,134,106 | 32,351,735 |
| ஏனைய வருமானம் | | 2,996,891 | 5,947,526 |
| **உப மொத்தம்** | | **39,140,998** | **38,299,261** |
| கழி – நிருவாக மற்றும் நிறுவன செலவினம் | | 13,394,559 | 12,043,038 |
| தேய்மானம் | | 4,337,125 | 4,311,238 |
| **மிகை / (குறைவு)** | | **21,409,314** | **21,944,985** |

**நிருவாக மற்றும் நிறுவன செலவினம்**

| | 2017 | 2016 |
|---|---|---|
| சம்பளம் மற்றும் கொடுப்பனவு | 5,337,934 | 5,898,824 |
| மேலதிக நேரம் | 79,374 | 74,306 |
| ஊழியர் சேமலாப நிதியத்திற்கான சபையின் பங்களிப்பு | 759,440 | 638,351 |
| ஊழியர் பொறுப்பு நிதியத்திற்கான சபையின் பங்களிப்பு | 151,888 | 127,670 |
| ஊழியர் நலன் புரி / உபசரனை செலவினம் - உள்நாடு | 423,725 | 447,950 |
| போக்குவரத்து உள்நாடு | 1,292 | 766 |
| உள்நாட்டு பொழுதுபோக்கு | 9,362 | 10,875 |
| ஊழியர் சீருடை | 51,540 | 60,080 |
| பல்வகை மிகை | 115,660 | 67,954 |
| பாதுகாப்பு வழங்கல் | 3,588,816 | 1,869,468 |
| சுத்திகரிப்பு கட்டணம் | 521,811 | |
| காகிதாதிகள் | 69,757 | 48,803 |
| தொலைபேசி | 134,944 | 96,707 |
| அச்சு மற்றும் வெளியீடு | 35,595 | 46,800 |
| நீர் | 4,800 | |
| மின்சாரம் | 1,233,357 | 1,698,408 |
| கட்டணம் மற்றும் அனுமதிப்பத்திரம் | 257,815 | 122,028 |
| காப்புறுதி நிலையான சொத்து | 1,710 | 2,579 |
| குத்தகை (காணி) | 45,000 | 90,000 |
| கட்டிடப் பராமரிப்பு | 218,365 | 171,959 |
| உபகரணப் பராமரிப்பு | 66,101 | 147,301 |
| போக்குவரத்து மற்றும் சரக்குப் பொருள் | 27,060 | 11,630 |
| வங்கிக் கட்டணம் | 3,750 | 4,055 |
| வாகன பராமரிப்பு மற்றும் பழுதுபார்த்தல் | - | 780 |
| புத்தகம் மற்றும் சஞ்சிகை | 24,770 | 22,540 |
| சமூகமளிப்பு ஊக்குவிப்பு | 230,696 | 383,205 |
| **மொத்தம்** | **13,394,559** | **12,043,038** |



### தேசிய விடுமுறை விடுதி - பொலன்னறுவை
### வருமான வெளிப்பாடுகள்
### 2017 டிசம்பர் 31 முடிவடைந்த கால எல்லைக்காக

| | குறிப்பு | 2017 ரூபா. | 2016 ரூபா. |
|---|---|---|---|
| கூலி வருமானம் | | 3,511,544 | 2,967,045 |
| ஏனைய வருமானம் (நீர் மற்றும் கழிவுப் பொருள்) | | 36,000 | 36,000 |
| **தேறிய வருமானம்** | | **3,547,544** | **3,003,045** |
| **மிகை / (குறைவு)** | | **3,547,544** | **3,003,045** |

### தேசிய விடுமுறை விடுதி - கல்குடா
### வருமான வெளிப்பாடுகள்
### 2017 டிசம்பர் 31 முடிவடைந்த கால எல்லைக்காக

| | குறிப்பு | 2017 ரூபா. | 2016 ரூபா. |
|---|---|---|---|
| வாடகை வருமானம் | | 4,947,280 | 5,219,760 |
| ஏனைய வருமானம் | | - | 265,862 |
| நீர் நுகர்வு வருமானம் | | 6,139,974 | |
| **உப மொத்தம்** | | **11,087,254** | **5,485,622** |
| கழி – நிருவாக மற்றும் நிறுவன செலவினம் | | 4,031,500 | 2,783,623 |
| தேய்மானம் | | 22,376,623 | 21,010,620 |
| **மிகை / (குறைவு)** | | **(15,320,870)** | **(18,308,620)** |

**நிருவாக மற்றும் நிறுவன செலவினம்**

| | 2017 | 2016 |
|---|---|---|
| சம்பளம் மற்றும் கொடுப்பனவு | 2,368,384 | 1,612,391 |
| மேலதிக நேரம் | 33,981 | 89,750 |
| ஊழியர் சேமலாப நிதியத்திற்கான சபையின் பங்களிப்பு | 239,966 | 137,329 |
| ஊழியர் பொறுப்பு நிதியத்திற்கான சபையின் பங்களிப்பு | 47,993 | 27,466 |
| ஊழியர் நலன் புரி / உபசரனை செலவினம் - உள்நாடு | 102,202 | 65,050 |
| உள்நாட்டு பயணம் | 12,000 | 13,317 |
| உள்நாட்டு பொழுதுபோக்கு | 32,508 | |
| ஊழியர் சீருடை | 12,885 | 11,595 |
| பல்வகை மிகை | 74,804 | 59,195 |
| பாதுகாப்பு வழங்கல் | 534,580 | 515,264 |
| காகிதாதிகள் | 359 | 12,330 |
| தொலைபேசி | 114,279 | 31,130 |
| அச்சு மற்றும் வெளியீடு | 4,325 | 20,590 |
| மின்சாரம் | 374,691 | 119,736 |
| கட்டிடப் பராமரிப்பு | 33,750 | 12,400 |
| உபகரணப் பராமரிப்பு | - | 14,980 |
| போக்குவரத்து மற்றும் சரக்குப் பொருள் | - | - |
| வங்கிக் கட்டணம் | - | 4,105 |
| சமூகமளிப்பு ஊக்குவிப்பு | 44,794 | 36,994 |
| **மொத்தம்** | **4,031,500** | **2,783,623** |

මගේ අංකය / எனது இல. / My No. : ரீஜபீ/ஏ/எஸ்எல்ரீடீஏ/1/17/01
ඔබේ අංකය / உமது இல. / Your No. :
දිනය / திகதி / Date : 2018 ஒக்தோபர் 31

தலைவர்,

இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை

**இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபையின் 2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீது 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை.**

---

இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபையின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஆண்டிற்கான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 2005 இன் 38 ஆம் இலக்க சுற்றுலா அலுவல்கள் அதிகாரச்சட்டத்தின் 20 ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் அதிகாரசபையின் ஆண்டறிக்கையுடன் சேர்த்துப் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இவ்வறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

---

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

1

අංක 306/72, පොල්දුව පාර, බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව. இல. 306/72, பொல்தூவ வீதி, பத்தரமுல்லை, இலங்கை. No. 306/72, Polduwa Road, Battaramulla, Sri Lanka.
+94 11 2 88 70 28 - 34 +94 11 2 88 72 23 ag@auditorgeneral.gov.lk www.auditorgeneral.gov.lk





### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

---

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் அதிகாரசபையின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி அதிகாரசபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) ஆம் மற்றும் (4) ஆம் உபபிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிவு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.4 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

---

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

2

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து, இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபையின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்கள்

**(அ) இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 02**

மீளாய்வாண்டின் போது மோட்டார் வாகன விற்பனையில் பெறப்பட்ட ரூபா 3,660,000 தொகை முதலீட்டு செயற்பாடுகளின் கீழ் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 07**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) நியமத்தின் 49 ஆம் பந்தியின் பிரகாரம் ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள் மீள் மதிப்பீடு செய்யப்படுமாயின் உரிய சொத்துக்களுக்குரிய தொகுதியின் சகல ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள் மீள் மதிப்பீடு செய்யப்பட வேண்டும். எனினும், அதிகாரசபைக்குச் சொந்தமான சகல காணிகள் மற்றும் கட்டிடங்கள் மீள் மதிப்பீடு செய்யப்படாமல் பிரதான அலுவலகத்தில் அமைந்துள்ள காணி மற்றும் கட்டிடங்கள் மாத்திரம் 2008 ஆம் ஆண்டின் போது ரூபா 1,378 மில்லியன் தொகையில் மீள் மதிப்பீடு செய்யப்பட்டு பெறுமதி நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது.





(ii) நியமத்தின் 65 ஆம் பந்தியின் பிரகாரம் நடைமுறையல்லாச் சொத்துக்கான பயன்தரு ஆயுட்காலம் வருடாந்தம் மீளாய்வு செய்யாமையின் காரணமாக ரூபா 240,036,680 கிரயமான 10 வகையான சொத்து வகைகள் முழுமையாகப் பெறுமானத்தேய்வு செய்யப்பட்டிருந்தும் தொடர்ந்தும் பயன்படுத்தப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் மதிப்பீடு செய்யப்பட்ட வழுவை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 03 இன் பிரகாரம் மீள் திருத்தம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

(iii) அதிகாரசபைக்குச் சொந்தமான காணி மற்றும் விருந்தினர் விடுதிகள் வேறு தரப்பினர்களுக்கு வாடகைக்கு வழங்கப்பட்டிருந்த போதிலும், நிதி நிலைமைக் கூற்றில் அது தொடர்பாக வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

#### 2.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) அதிகாரசபைக்குரிய ஆதனங்களில் மேற்கொள்ளப்பட்ட ரூபா 110,449,509 தொகையான அபிவிருத்தி கிரயத்திற்குரிய ரூபா 87,063,977 தொகையான திரண்ட பெறுமானத்தேய்வு கணக்கீடு செய்யப்படாமையின் காரணமாக மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு கற்பனைச் சொத்துக்களின் பெறுமதி மற்றும் திரண்ட இலாபம் ரூபா 87,063,977 இனால் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டின் போது 2016 மற்றும் முன்னைய ஆண்டிற்காக ரூபா 51,019,696 தொகை ஊழியர் சேமலாபத்திற்கும், ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திற்கும் செலுத்தப்பட்டிருந்ததுடன் 2016 ஆம் ஆண்டிற்காகச் செலுத்தப்பட்ட பங்களிப்புப் பணத்தின் ஒப்பீட்டு ரீதியான பெறுமதியில் மீண்டும் வெளியிடல் மற்றும் முன்னைய ஆண்டிற்கான மீதி தொடர்பாக ஆரம்ப மீதியை மீண்டும் வெளியிடுதல் கடந்த கால ரீதியில் சீராக்குவதற்குப் பதிலாக மொத்தத் தொகையும் மீளாய்வாண்டின் நிதிச்செயலாற்றல் கூற்றில் சீராக்கப்பட்டமையின் காரணமாக மிகை அப்பெறுமானத்தால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

### 2.2.3 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

கீழே காண்பிக்கப்படுகின்ற விடயங்களுக்கு எதிரே காண்பிக்கப்பட்டுள்ள சான்றுகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை.

| | விடயம் | பெறுமதி | சமர்ப்பிக்கப்படாத சான்றுகள் |
|---|---|---|---|
| | | ரூபா | |
| (அ) | முதலீடு (சுற்றுலாச்சபை) | 52,154,738 | முதலீட்டுச் சான்றிதழ் அல்லது உறுதிப்படுத்தும் கடிதம் ஏனைய எழுத்துமூல சான்றுகள் |
| (ஆ) | முதலீடு (சுற்றுலா மேம்படுத்தல்) | 976,509 | |
| (இ) | சுற்றுலா நிதியம் | 930,000 | பங்குச் சான்றிதழ் அல்லது ஏனைய எழுத்து மூல சான்றுகள் மற்றும் மீதி உறுதிப்படுத்தல் கடிதம் |
| (ஈ) | நிதன் நிதிய முதலீடு | 759,021 | |
| (உ) | இலங்கை வரையறுத்த ஹோட்டல் சுற்றுலாக் கம்பனி | 750,000 | |
| (ஊ) | வியாபாரக் கடன்பட்டோர் | 60,834,836 | மீதி உறுதிப்படுத்தல் கடிதம் |
| (எ) | நானாவித கடன்பட்டோர் | 4,688,558 | மீதி உறுதிப்படுத்தல் கடிதம் |
| (ஏ) | நீர்ப் பாவனைக் கடன்பட்டோர் (பாசிக்குடா) | 23,227,328 | மீதி உறுதிப்படுத்தல் கடிதம் |
| (ஐ) | மலசலகூட சேவைகளை வழங்குவதற்காக கிடைக்க வேண்டிய கட்டணம் | 124,752,772 | மீதி உறுதிப்படுத்தல் கடிதம் |
| (ஒ) | கடன்பட்டோர் தேசிய கடதாசிக் கூட்டுத்தாபனம் | 9,627,113 | மீதி உறுதிப்படுத்தல் கடிதம் |
| (ஓ) | வழங்குனர்களுக்கும் ஊழியர்களுக்கும் முற்பணம் | 21,302,883 | மீதி உறுதிப்படுத்தல் கடிதம் |
| (ஔ) | ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களின் பெறுமானத்தேய்வு | 67,624,406 | தனிப்பட்ட மீதிகளை அடிப்படையாகக் கொண்ட விரிவான பட்டோலை |
| (க) | காணி | 33,904,345 | உரித்தை உறுதிப்படுத்தும் ஆவணங்கள் |
| (கா) | வைப்புக்கள் / ஏனைய கொடுப்பனவுகள் | 21,302,882 | வைப்புக்களை உறுதிப்படுத்துவதற்குரிய ஆவணங்கள் |





### 2.2.4 விளக்கமளிக்கப்படாத வேறுபாடுகள்

அதிகாரசபையின் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் இலங்கை சுற்றுலா மேம்படுத்தல் பணியகத்திலிருந்து கிடைக்க வேண்டிய நானாவித கடன்பட்டோர் மீதியாக ரூபா 18,613,438 தொகை காண்பிக்கப்பட்டிருந்ததுடன் இலங்கை சுற்றுலா மேம்படுத்தல் பணியகத்தின் கணக்குகளில் அந்த மீதி ரூபா 25,812,532 ஆக காண்பிக்கப்பட்டமையின் காரணமாக ரூபா 7,199,094 தொகையான விளக்கமளிக்கப்படாத வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டது.

## 2.3 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) வியாபார கடன்பட்டோர்களிடமிருந்து கிடைக்க வேண்டிய ரூபா 2,758,157 தொகை 04 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாகவும், ரூபா 59,936,047 தொகை 1 வருடத்திற்கும் 4 வருடங்களுக்கும் இடையிலான காலமாகவும் அறவிடப்படாமல் காணப்பட்டது.

(ஆ) பெறவேண்டிய வைப்புப் பெறுமதி ரூபா 6,963,732 தொகை 5 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாகவும், 5 இற்கும் 3 வருடங்களுக்கும் இடையிலான காலத்தில் ரூபா 1,700,000 தொகையும் அறவிடப்படாமல் காணப்பட்டது.

(இ) பாசிக்குடா நீர் பாவனை கடன்பட்டோரிடமிருந்து அறவிடப்படவேண்டிய ரூபா 18,670,721 தொகையான மீதி 01 வருடத்திற்கும் 02 வருடங்களுக்கும் இடையிலான காலமாக அறவிடப்படாமல் காணப்பட்டது.

(ஈ) நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் நிறுத்தி வைத்தல் தொகையில் 04 வருடங்களுக்கு மேற்பட்ட ரூபா 15,566,948 தொகையும், 02 வருடங்களுக்கு மேற்பட்ட 04 வருடங்களின் குறைந்த ரூபா 4,881,330 தொகையும், 01 வருடங்களுக்கு குறைந்த ரூபா 11,026,841 தொகையும் தீர்க்கப்படாமல் காணப்பட்டது.

## 2.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

பின்வரும் இணங்காமைகள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|
| (அ) 2005 இன் 38 ஆம் இலக்க சுற்றுலா அலுவல்கள் அதிகாரச்சட்டத்தின் IV ஆம் அத்தியாயத்தின் 26(1) உப பிரிவு | பிரபல்யமான மற்றும் சுற்றுலா அபிவிருத்திப் பிரதேசமொன்றில் மேற்கொள்ளக்கூடிய சுற்றுலா நடவடிக்கைகள், வணிக மற்றும் ஏனைய நடவடிக்கைகள் ஆகியவற்றை நிச்சயிக்கும் வகையில் கட்டளை தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை ள | |
| (I) நிதிப்பிரமாணம் 169(2) | காசோலைகள் தேறுவதற்கு முன்னர் சேவைகள் வழங்கப்பட்டமையின் காரணமாக ரூபா 650,034 பெறுமதியான 22 காசோலைகளுக்குரிய பணத்தை அறவிடுவதற்கு முடியாதிருந்தது. |
| (II) நிதிப்பிரமாணம் 396 | 2010 ஆம் ஆண்டு முதல் 2017 ஆம் ஆண்டு வரையான காலத்தில் விநியோகிக்கப்பட்டிருந்தும் மாற்றப்படாத ரூபா 2,895,858 தொகையான காசோலைகள் தொடர்பாக நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்வில்லை. |
| (III) நிதிப்பிரமாணம் 757 | ரூபா 1,880,781 பெறுமதியான நூலகப் புத்தகங்கள் தொடர்பாக மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| (இ) 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ 12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 9.14.1 மற்றும் 9.14.2 ஆம் பிரிவுகள் | மனிதவள முகாமைத்துவத்திற்குரிய சட்டங்கள் மற்றும் பிரமாணங்கள் தொடர்பாக சகல விடயங்களையும் உள்ளடக்கிய மனிதவள முகாமைத்துவம் தொடர்பான கைநூலொன்று தயாரிக்கப்பட்டு திறைசேரி செயலாளரின் இணக்கப்பாட்டுடன் கட்டுப்பாட்டுச் சபையினால் |







| | |
|---|---|
| | அங்கீகரிக்கப்பட வேண்டிய போதிலும் அதிகாரசபை அத்தேவைகளுக்கு இணங்க நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |
| (ஈ) 1978 திசெம்பர் 19 ஆந் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை | நிலையான சொத்துப் பதிவேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை. |

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதிகாரசபையின் நிதி விளைவுகள் ரூபா 385,538,658 மிகையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 373,897,908 ஆனமையால் நிதி விளைவில் ரூபா 11,640,750 அதிகரிப்பொன்று காணப்பட்டது. சம்பளமும் வேதனமும் மற்றும் ஊழியர் நலன்கள் ரூபா 91,611,471 இனால் அதிகரித்திருந்த போதிலும், சுற்றுலா அபிவிருத்தி வரி வருமானம் ரூபா 37,124,844 இனாலும், அனுமதிப்பத்திரக் கட்டணம் ரூபா 63,503,290 இனாலும் மற்றும் ஏனைய வருமானம் ரூபா 16,259,224 இனாலும் அதிகரித்தமை மேற்கூறப்பட்ட அதிகரிப்பிற்கு பிரதான காரணமாக இருந்தது.

மீளாய்வாண்டிலும் கடந்த 04 ஆண்டுகளினதும் நிதி விளைவுகளைப் பகுப்பாய்வு செய்த போது 2013 ஆம் ஆண்டிலும் 2014 ஆம் ஆண்டிலும் நிதி விளைவுகள் அதிகரித்திருந்தது. எனினும், 2014 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது 2015 ஆம் ஆண்டின் போது நிதி விளைவில் வீழ்ச்சியொன்று ஏற்பட்டிருந்ததுடன் மீண்டும் 2016 ஆம் ஆண்டின் போதும், மீளாய்வாண்டின் போதும் அது அதிகரித்திருந்தது. எனினும், நிதி விளைவுகளில் ஊழியர் ஊதியம், நடைமுறையல்லாச் சொத்துக்களுக்கான பெறுமானத்தேய்வு மற்றும் அரசாங்க வரி என்பவற்றை மீளச் சீராக்கும் போது 2013 ஆம் ஆண்டில் ரூபா 381,486,482 தொகையான அதிகாரசபையின் பங்களிப்பு தொடர்ச்சியாக அதிகரித்து மீளாய்வாண்டின் போது ரூபா 623,332,169 ஆக இருந்தது.

### 3.2 அதிகாரசபைக்கு எதிராக மற்றும் நிறுவனத்தால் ஆரம்பிக்கப்பட்டுள்ள சட்டரீதியான விடயங்கள்

அதிகாரசபையினால் வெளிநபர்களுக்கு எதிராக நீதிமன்றத்தில் 03 வழக்குகள் தொடரப்பட்டிருந்தன.

4. செயற்பாட்டு மீளாய்வு

4.1 செயலாற்றல்

4.1.1 திட்டமிடல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2014 பெப்ரவரி 17 ஆந் திகதிய 01/2014 ஆம் இலக்க நிதிச் சுற்றறிக்கையின் 04 ஆம் பந்தியின் பிரகாரம் 2005 இன் 38 ஆம் இலக்க சுற்றுலா அலுவல்கள் அதிகாரச்சட்டத்தில் குறிப்பிடப்பட்ட நோக்கங்களை அடைந்து கொள்வதற்கு இலக்கிடப்பட்ட செயற்பாடுகளை உள்ளடக்கி வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்பட வேண்டியிருந்ததுடன் அந்த அத்தியாயத்தின் (3) ஆம் உபபிரிவின் பிரகாரம் உரிய ஆண்டின் வருடாந்த பாதீட்டை அடிப்படையாகக் கொண்டு முன்னுரிமையின் பிரகாரம் தயாரிக்கப்பட்ட செயற்பாட்டுத் திட்டம் (Activity Plan), அமுல்படுத்தும் கால அட்டவணை (Time Line) மற்றும் அந்த செயற்பாடுகளில் எதிர்பார்க்கப்பட்ட பூர்த்தி விளைவுகள் (Output / Out come) என்பன உள்ளடக்கப்பட வேண்டியிருந்தது. சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபையினால் மேற்கூறப்பட்ட பிரகாரம் செயல்நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மேற்கூறப்பட்ட சுற்றறிக்கையின் 04(இ) பந்தியின் பிரகாரம் செயல் நடவடிக்கைத் திட்டம் வருடாந்த பாதீட்டை அடிப்படையாகக் கொள்ள வேண்டியிருந்த போதிலும், வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் நிறுவனத்தின் ஒவ்வொரு பிரிவினதும் செலவினத்திற்காக மதிப்பீடு செய்யப்பட்ட தொகை ரூபா 1,979.8 மில்லியனாக இருந்ததுடன் உள்ளபடியான செலவினம் ரூபா 571.32 மில்லியன் ஆகும். அதன் பிரகாரம் செலவின மதிப்பீட்டின் போது மிகை மதிப்பீடு செய்யப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

4.1.2 செயற்படுநிலையும் மீளாய்வும்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் ஆண்டில் அமுல்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்பட்ட 111 செயற்பாடுகளுக்கிடையே ஆண்டின் போது 37 செயற்பாடுகளே அமுல்படுத்தப்பட்டிருந்தன. அதாவது





33.33 சதவீதம் ஆகும். ஆண்டின் போது ஆரம்பிக்கப்பட்ட செயற்பாடுகளுக்கிடையே 50 சதவீதத்திற்குக் குறைவாக நிதி செலவிடப்பட்ட செயற்பாடுகள் 22 ஆகக் காணப்பட்டதுடன், 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதி செலவிடப்படாத 66 செயற்பாடுகள் காணப்பட்டதுடன் அதற்காக ரூபா 681.83 மில்லியன் ஒதுக்கப்பட்டிருந்தது.

(ஆ) அதிகாரசபையின் உரித்து மற்றும் முகாமைத்துவத்தின் கீழ் 04 சுற்றுலா விடுமுறை விதிகளும், 03 சுற்றுலா தங்குமிடங்களும் காணப்பட்டன. அதிக பொது மேந்தலை செலவினங்களின் காரணமாக 05 விடுமுறை விடுதிகளில் ரூபா 28,348,616 தொகையான பற்றாக்குறை உருவாகி இருந்ததுடன் மீளாய்வாண்டின் போது சகல விடுதிகளினதும் தேறிய நட்டம் ரூபா 3,391,757 ஆக இருந்தது. 05 விடுதிகளுக்கு வசதிகள் வழங்குதல் மற்றும் சேவைகளுக்காக ஒதுக்கப்பட்ட நிதியேற்பாடுகளில் 21 சதவீதம் மாத்திரம் செலவிடப்பட்டிருந்தன.

4.2 முகாமைத்துவ செயற்பாடுகள்

சுற்றுலாக் கைத்தொழிலின் மேம்பாட்டிற்காக காணிகளை வாடகைக்கு வழங்குதல் அதிகார சபையின் மூலம் இடம்பெற்றிருந்ததுடன் திருகோணமலை, யால பலட்டுபான மற்றும் கல்குடா சுற்றுலா பிரதேசங்களுக்குரிய காணிகளை வாடகைக்கு வழங்குதல் தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) திருகோணமலை குச்சவெளிப் பிரதேசத்தில் அதிகாரசபைக்குக் கையேற்கப்பட்ட 510 ஏக்கர் அளவான காணியில் மீளாய்வாண்டின் இறுதிவரையிலும் 30 ஏக்கர் காணி மாத்திரமே வாடகைக்கு வழங்கப்பட்டிருந்தது.

(ஆ) சுற்றுலா அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக யால பலட்டுபான பிரதேசத்தில் அதிகாரசபைக்குக் கையளிக்கப்பட்ட 1110 ஏக்கர் காணியில் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதி வரை 63 ஏக்கர் காணி மாத்திரமே முதலீட்டாளருக்கு குத்தகை அடிப்படையில் வழங்கப்பட்டிருந்தது.

(இ) கல்குடா (பாசிக்குடா) சுற்றுலா பிரதேசத்திற்குரிய 202 ஏக்கரில் மீளாய்வாண்டின் இறுதியில் 103 ஏக்கர் குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்ததுடன் கற்பிட்டி மற்றும் அருகிலுள்ள தீவுகளில் கையேற்கப்பட்ட 3986 ஏக்கரில் 177 ஏக்கர் மாத்திரமே குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்தது.

**4.3 விளைவற்ற மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 1969 ஆம் ஆண்டின் போது சுற்றுலா கைத்தொழிலுக்காக இலங்கை சுற்றுலாச் சபைக்கும், பின்னர் சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபைக்கும் கையளிக்கப்பட்ட பெந்தோட்டை சுற்றுலா விடுமுறை விடுதிக்குரிய 94 ஏக்கர் அளவிலான காணியில் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதி வரையும் 54 ஏக்கர் அளவிலான காணி மாத்திரமே பயன்படுத்தப்பட்டிருந்தது. இதன்படி 46 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக 40 ஏக்கருக்கு மேற்பட்ட காணியின் அளவு செயற்பாடற்றுக் காணப்பட்டது.

(ஆ) பெந்தோட்டை தேசிய விடுமுறை விடுதி வளவில் அமைந்துள்ள 2880 சதுர அடி அளவிலான கட்டிடத்தின் நிலப்பரப்பு 2006 ஆம் ஆண்டு முதல் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் எவ்வித பொருளாதார ரீதியான நடவடிக்கைகளிலும் ஈடுபடுத்தப்படாமல் விளைவற்றுக் காணப்பட்டது.

(இ) அதிகாரசபைக்குக் கையளிக்கப்பட்டுள்ள எனினும் அதிகாரசபை குத்தகை வருமானம் பெறாத 69 ஏக்கர் பரப்பளவுடன் 10 காணி மற்றும் கட்டிடங்கள் காணப்பட்டன.

(ஈ) பிபில மற்றும் றாகல பிரதேசங்களில் 2 விடுமுறை விடுதிகள் காணப்பட்ட போதிலும் இந்த விடுதிகளை ஆக்கபூர்வமாக பயன்பாட்டிற்கு எடுத்து வருமானத்தை உழைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**4.4 பதவியணியினர் நிர்வாகம்**

அதிகாரசபையின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர்களின் 15 பதவிப் பெயர்களின் கீழ் 226 எண்ணிக்கையான பதவிகள் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தால் அங்கீகரிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டில் உள்ளபடியான ஊழியர் எண்ணிக்கை 195 ஆக இருந்ததுடன் வெற்றிடங்களின் எண்ணிக்கை 31 ஆக இருந்தது.

**5. நிலைபேறான அபிவிருத்தி**

**5.1 நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை அடைதல்**

நிலைபேறான அபிவிருத்தி தொடர்பான ஐக்கிய நாடுகளின் ஆண்டு 2030 "நிகழ்ச்சி நிரல்" இன் பிரகாரம் சகல அரசாங்க நிறுவனங்களினாலும் நடவடிக்கை எடுக்கப்பட





வேண்டி இருந்ததுடன் மீளாய்வாண்டில் இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபையினால் தமது விடயப் பரப்பின் கீழ் கொண்டு வரப்பட்ட பணிகள் தொடர்பாக எவ்வாறு செயற்பட வேண்டியுள்ளது தொடர்பாக அறிவிக்கப்பட்டிருந்தது.

**6. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**6.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்**

2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 6.5.1 ஆம் பந்தியின் பிரகாரம் கணக்காண்டு முடிவடைந்து 60 தினங்களுக்குள் நிதிக்கூற்றுக்கள் சமர்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், 2017 இன் நிதிக்கூற்றுக்கள் 2018 யூன் 22 ஆந் திகதி கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

**6.2 உள்ளகக் கணக்காய்வு**

உள்ளகக் கணக்காய்வுத் திட்டத்தின் பிரகாரம் 13 விடயங்களில் கணக்காய்வு நடவடிக்கைகள் திட்டமிடப்பட்டிருந்த போதும் அதில் 07 விடயங்களில் கணக்காய்வு இடம்பெறவில்லை.

**6.3 பெறுகை மற்றும் ஒப்பந்த நடைமுறைகள்**

**6.3.1 பெறுகைகள்**

2014 யூன் முதல் மத்திய வளிபதனாக்கி முறைமையை தாபிப்பதற்கு திட்டம் தயாரிக்கப்பட்டிருந்ததுடன் 2018 செப்தெம்பர் 30 ஆந் திகதி வரை அந்தப் பணிகளுக்காக அண்ணளவாக ரூபா 14,029,949 தொகையான பணம் செலவிடப்பட்டிருந்தது. இந்தப் பெறுகை நடவடிக்கைகள் தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2006 இன் அரசாங்க பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 5.3.5 ஆம் பந்திக்குரிய மேலதிகம் 9 இன் பிரகாரம் நிர்மாண மதிப்பீட்டுப் பெறுமதி ரூபா 60 மில்லியனை விஞ்சிய இந்த வளிப்பதனாக்கி ஒப்பந்தத்திற்காக கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபையின் EM 1 தரத்தில் பதிவு செய்த ஒப்பந்தக்காரர்களிடம் கேள்வி கோரப்பட வேண்டிய போதிலும் 2017 யூன் 07 ஆந் திகதி பிரசுரிக்கப்பட்ட பத்திரிகை அறிவித்தலின் பிரகாரம் இது EM 2 அல்லது அதற்கு மேற்பட்ட தகைமையுடைய வழங்குனருக்கு / விண்ணப்பதாரருக்கு விண்ணப்பிக்க முடியுமென அறிவிக்கப்பட்டிருந்தது.

(ஆ) 2017 நவம்பர் 27 ஆந் திகதிய வேலை கையளிப்பு கடிதத்தின் பிரகாரம் அதில் குறிப்பிடப்பட்ட திகதி முதல் 180 நாட்களுக்குள் உரிய பணிகள் பூர்த்தி செய்யப்பட வேண்டிய போதிலும் 2018 ஆகஸ்ட் வரையிலும் 283 நாட்கள் அளவிலான காலம் கடந்திருந்த போதிலும் ஆரம்ப வேலை நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

### 6.3.2 தாமதமான செயற்திட்டங்கள்

2016 பெப்ரவரி 10 ஆந் திகதி ஆரம்பிக்கப்பட்டு 2016 யூன் 08 ஆந் திகதி பூர்த்தி செய்யப்பட வேண்டிய பாசிக்குடா நீர் வழங்கல் செயற்திட்டத்தில் நிலக்கீழ் நீர்த் தேக்கம், பம்பிக்கூட பாதுகாப்பு கொட்டகை நிர்மாணம் மற்றும் வேலைத்தள வேலைக்கான ஒப்பந்தம் ரூபா 22,258,780 ஒப்பந்தப் பெறுமதிக்கு தனியார் நிறுவனத்திற்கு 2016 மார்ச் 02 ஆந் திகதி கையளிக்கப்பட்டிருந்தது. கணக்காய்வுத் திகதி வரையிலும் இந்த ஒப்பந்தத்திற்குரிய இறுதிச் சிட்டை சமர்ப்பிக்கப்படாதிருந்ததுடன் பணிகள் நிறைவேற்றப்பட்டமைக்கு சிபாரிசும் வழங்கப்பட்டிருக்கவில்லை. 119 நாட்களில் பூர்த்தி செய்யப்பட வேண்டிய ஒப்பந்தம் இதுவரையிலும் 02 வருடங்களை விட தாமதமடைந்திருந்த போதிலும் நிர்மாணங்கள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. மேலும் ஒப்பந்தத்திற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்த செயலாற்றல் பிணை முறியும் கலாவதியாகி இருந்தது.

### 6.4 பாதீட்டுக் கட்டுப்பாடு

மீளாய்வாண்டில் 19 செலவின விடயங்களில் பாதிடப்பட்ட தொகைக்கும் உள்ளபடியான தொகைக்கும் இடையே 25 சதவீதம் முதல் 405 சதவீதம் வரையிலான வீச்சில் முரண்கள் அவதானிக்கப்பட்டமையால் பாதீடு ஆக்கபூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுக் கருவியாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

### 6.5 ஆண்டறிக்கையை சபையில் சமர்ப்பித்தல்

2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 6.5.3 ஆம் பிரிவின் பிரகாரம் அதிகாரசபையின் 2016 ஆம் ஆண்டின் ஆண்டறிக்கை 2018 செப்தெம்பர் 10 ஆந் திகதி வரை பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.



ජාතික විගණන කාර්යාලය
தேசிய கணக்காய்வு அலுவலகம்
NATIONAL AUDIT OFFICE
NAOSL

### 6.6 தீர்க்கப்படாதுள்ள கணக்காய்வுப் பந்திகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கற்பிட்டி துறையடி இறங்குதுறையை நிர்மாணித்தல் மற்றும் வன்னிமுந்தலம் களப்பு அருகிலுள்ள வீதிக்கு தார் இடுவதற்காக கருங்கல், கிறவல் மற்றும் ஏ.பீ.சீ வழங்கல் தொடர்பாக பின்வரும் கணக்காய்வு அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) சந்தை விலை ஒப்பீட்டு முறையின் கீழ், கருங்கல் வழங்குவதற்கு தெரிவு செய்யப்பட்ட வழங்குனருக்குப் பதிலாக செயற்திட்டப் பணிப்பாளரின் விருப்பத்தின் படி வேறு நபரொருவரிடமிருந்து 1648 கியூப் கருங்கல் அதிக விலையில் கொள்வனவு செய்யப்பட்டமையால் ரூபா 824,000 மேலதிக தொகையொன்றைச் செலவிடுவதற்கு நேர்ந்திருந்ததுடன், அந்தப் பணம் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதி வரையும் அறவிடப்பட்டிருக்கவில்லை.

(ii) கற்பிட்டி வேலைத்தளத்திற்கு கருங்கல், கிரவல் மற்றும் ஏ.பீ.சீ வழங்குவதற்காக பயன்படுத்தப்பட்டதாகக் குறிப்பிடப்பட்ட டிபர் வாகனமொன்றின் கொள்ளளவு 3 கியூப் ஆக இருந்த போதிலும் 4 கியூப் படி பொருட்கள் வழங்கியதாகக் கருதி கொடுப்பனவு செய்யப்பட்டமையினால் மேலதிகமாகச் செலுத்தப்பட்ட ரூபா 2,549,000 தொகையை அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(iii) 1648 கருங்கல் கியூப், 368 கியூப் ஏ.பீ.சீ மற்றும் 40 கியூப் கிரவல் என்பன அதிகாரசபையால் பௌதீக ரீதியில் கையேற்கப்படாத பொருட்களின் பெறுமதியான ரூபா 10,196,000 தொகைக்காக அதிகாரசபையால் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

(ஆ) கதிர்காமம் சுற்றுலா விடுமுறை விடுதியில் மேற்கொள்ளப்பட்ட திருத்த நடவடிக்கைகளுக்கு மேலதிகமாகச் செலுத்தப்பட்ட ரூபா 11,089,228 தொகையை பொறுப்புவாய்ந்த உத்தியோகத்தரிடமிருந்து அறவிடுவதற்கு இதுவரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) கற்பிட்டி மொஹட்டுவாரம இறங்குதுறை நிர்மாணிக்கும் நடவடிக்கைகளுக்காக டோசர் இயந்திரம் வழங்கப்பட்டதாக வழங்குனரால் சமர்ப்பிக்கப்பட்ட மூன்று கடிதங்களையும் அடிப்படையாகக் கொண்டு 941.7

மணித்தியாலங்களுக்காக ரூபா 3,226,950 தொகை செலுத்தப்பட்டிருந்தது. எனினும் இந்த டோசர் இயந்திரத்தின் சேவை பெறப்பட்டமைக்கு தினந்தோறும் மாணி வாசிக்கப்பட்டு வேலை மணித்தியாலம் பதியப்பட்டு அந்த வேலை மணித்தியால அறிக்கை அதிகாரசபையின் உத்தியோகத்தரொருவரினால் உறுதிப்படுத்தப்படாமல் இக் கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் செயற்திட்டத்தின் வேலைப் பரிசோதகரினால் உழவு இயந்திர சேவை திருப்திகரமாக பெறப்பட்டதாக மேற்கூறப்பட்ட மூன்று கடிதத்திலும் உறுதிப்படுத்தப்பட்டிருந்தது.

(ஈ) அதிகாரசபையினால் தேவையினை மதிப்பிடாமல் 55 சோபா கதிரைகள் கொள்வனவு செய்வதற்காக ரூபா 2,659,875 தொகை செலவிடப்பட்டிருந்தது. இந்த கதிரைகளைக் கொள்வனவு செய்வதற்கு வரையறுக்கப்பட்ட கூறுவிலைகள் கோரப்பட்டிருந்த போதிலும் மாதிரி கதிரைகள் வழங்கிய நிறுவனத்திலிருந்து கூறுவிலை பெறப்பட்டிருக்கவில்லை. கதிரைகள் கொள்வனவு செய்யும் போது பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 5.4.4 ஆம் பிரிவிற்கு முரணாக முற்பணமாக மொத்த வழங்கல் பெறுமதியில் 50 சதவீதம் செலுத்தப்பட்டிருந்ததுடன் சில சந்தர்ப்பங்களில் கதிரைகளைப் போக்குவரத்துச் செய்வதற்காக ரூபா 211,000 பயனற்ற செலவினமும் செலவிடப்பட்டிருந்தது. அவ்வாறே ரூபா 159,803 பெறுமதியான 03 கதிரைகள் காணாமல் போயிருந்தன.

(உ) அமெரிக்க ஐக்கிய குடியரசின் 30 மில்லியன் டொலர்களை விஞ்சிய செயற்திட்டமொன்றாக கற்பிட்டி ஒன்றிணைந்த சுற்றுலா அபிவிருத்தி செயற்திட்டம் வகைப்படுத்தப்பட்டு உத்தியோகத்தர்களுக்கு சம்பளம் மற்றும் படிகள் செலுத்தப்பட்டமையினால் 2009 முதல் 2011 வரை உத்தியோகத்தர்களுக்கு மேலதிகமாகச் செலுத்தப்பட்ட ரூபா 3,780,253 தொகையான பணத்தை அதிகாரசபைக்கு அறவிடுவதற்கு மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஊ) பாசிக்குடா சுற்றுலா விடுதி செயற்திட்டத்தில் மழை நீர் வழிந்தோடும் வடிகாண் முறைமையின் நிர்மாணங்களை பௌதீக ரீதியில் பரீட்சித்த போது உரிய காணியின் பூகோள பிரச்சினைகளைக் கவனத்தில் கொண்டு நிர்மாணங்கள் மேற்கொள்ளப்படாமையின் காரணமாக வடிகாண் முறைமையில் நீர் தேங்கி நின்றமை கணக்காய்வில் அவதானிக்கப்பட்டதுடன் கணக்காய்வின் போது கணிப்பிடப்பட்ட உள்ளபடியான அளவை அறிக்கை, பட்டியல்களில் குறிப்பிடப்பட்ட கொடுப்பனவு அளவுகளுடன் ஒப்பீடு செய்தபோது ரூபா 3,792,420 தொகையொன்று ஒப்பந்தக்காரருக்கு மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.





(எ) அதிகாரசபையில் "வன்ஸ்டொப்" முதலீட்டை மேம்படுத்துவதற்காக இணையதளத்தை வடிவமைக்கும் ஒப்பந்தத்திற்குரியதாக ரூபா 699,300 மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதிவரையிலும் அந்தத் தொகை மீள அறவிடப்பட்டிருக்கவில்லை.

(ஏ) 2006 சனவரி 25 ஆந் திகதிய தேசிய பெறுகைகள் முகவராண்மைச் சுற்றறிக்கையின் 8 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட ஒப்பந்த வழங்கல்களுக்கான சிபாரிசுகளுக்கு முரணாக 2009 ஆம் ஆண்டு முதல் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதி வரை பெந்தோட்டை மலசலகூட முறைமையை செயற்படுத்தும் ஊழிய ஒப்பந்தம் பெறுகை நடைமுறைகளின்றி தனியார் நிறுவனமொன்றிற்குக் கையளிக்கப்பட்டிருந்தது.

(ஐ) பாசிக்குடா சுற்றுலா வலயத்தில் தேசிய விடுமுறை விடுதியில் 1.126 கிலோமீற்றர் நுழைவு வீதிக்கு காபட் இடுவதற்காக போலியாக 04 கட்டங்களுக்கு கிரய மதிப்பீடு தயாரிக்கப்பட்டு பெறுகைகள் நடைமுறை பின்பற்றப்படாமல் ஒப்பந்தக்காரரைத் தெரிவு செய்து நிர்மாணங்களுக்காக ரூபா 22,013,564 மேலதிக தொகையொன்று ஒப்பந்தகாரருக்கு செலுத்தப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் அந்தத்தொகை மீள அறவிடப்பட்டிருக்கவில்லை.

## 7. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின்போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுக் குறைபாடுகள் அவ்வப்போது அதிகாரசபையின் தலைவரது கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. கீழே குறிப்பிடப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகளில் விசேட கவனம் தேவைப்படுகின்றது.

| முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகள் | அவதானிப்புகள் |
|---|---|
| (அ) செயற்பாட்டு நிர்வாகம் | (i) அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் அதிகாரசபையின் செயல்நடவடிக்கைத் திட்டத்திற்கு இணங்க மேற்கொள்ளாமை. |
| | (ii) பௌதீக செயல்முன்னேற்றம் தொடர்பான அறிக்கையிடலுக்கு வேலைத்திட்டமொன்று தயாரிக்கப்படாமை. |

| | | |
|---|---|---|
| | (iii) | பெறுகை செயற்பாடுகளாக புறக்கணிக்கப்பட்ட வழங்குனர்களுக்காக கறுப்புப் பதிவேடு பேணப்படாமை. |
| | (iv) | பெறுகைகளுக்காக மதிப்பீடு தயாரிக்கும் போது தர்க்க அடிப்படை பின்பற்றப்படாமை. |
| | (v) | வழங்குனர்களிடமிருந்து முறையான பிரகாரம் பொறுப்புக்கள் உறுதிப்படுத்தப்படாமை. |
| (ஆ) செயற்திட்டக் கட்டுப்பாடு | (i) | செயற்திட்டத்தை அமுல்படுத்தும் போது அவற்றை மேற்பார்வை செய்தல் மற்றும் கொடுப்பனவுகளை சிபாரிசு செய்யும் போதும், அங்கீகரிக்கும் போதும் ஆற்றப்பட்ட வேலை அறிக்கை பரீட்சிக்கப்படாமல் கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருந்தமை. |
| | (ii) | ஒப்பந்தப் பதிவேடு பேணப்படாமை. |
| (இ) சொத்துக்கள் முகாமைத்துவம் | (i) | சொத்துக்கள் பதிவேடு நாளதுவரையாகப் பேணப்படாமை. |
| | (ii) | சொத்துக்களின் உரித்தைக் கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்காமை. |
| (ஈ) பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய மீதிகளின் கட்டுப்பாடு | | செலுத்த வேண்டிய மற்றும் பெறவேண்டிய மீதிகளை தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்காமை |
| (உ) கணக்கீடு | (i) | சிலவற்றில் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் பின்பற்றப்படும் போது வழுக்கள் காணப்பட்டமை. |
| | (ii) | சில கணக்கீட்டுக் கொள்கைகள் வெளிப்படுத்தாமை. |





(iii) மூலதனச் சொத்துக்களை கணக்கு வைத்தல் உரிய மூல ஆவணங்கள் இன்றி கணக்கு வைத்தல் மேற்கொள்ளப்பட்டிருந்தமை.

ஒப்பம்./எச்.எம். காமினி விஜேசிங்ஹ
கணக்காய்வாளர் தலைமை அதிபதி

எச்.எம். காமினி விஜேசிங்ஹ
கணக்காய்வாளர் தலைமை அதிபதி




**இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை**

இலக்கம் 80, காலிவீதி, கொழும்பு 03.

www.sltda.gov.lk